Registered as a Newspaper in Ceylon * விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

National Tamil Daily

மலர் 9
இதழ் 355
தேசிய தினசரி

தை 20 ஜில்ஹஃ 3 சனிக்கிழமை (3-2-68)

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்




டொலர் கோர்ப்பரேஷன்
கொழும்பு

சுதந்திரக்கட்சி, பொதுக்கொள்கைத் திட்டம்

# இன, மத பாகுபாடற்ற சமத்துவ சமுதாயமே நோக்கமாம்

## பண்டாரநாயகா கொள்கை அடிப்படையில் செயலாற்ற முடிவு

### சிங்களமே ஆட்சிமொழி ஆனால் தமிழுக்கும் உரிமை

### பௌத்தத்துக்கு முதலிடம் மதசுதந்திரம் உண்டு

கொழும்பு, வெள்ளி

இன, மத ஜாதிப் பாகுபாடற்ற சோஷலிஸ சமுதாயத்தை காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகாவின் கொள்கை அடிப்படையில் நிறுவுவதே தமது கொள்கையென்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவைகளுடன் சேர்ந்து வெளியிட்டுள்ள பொதுக்கொள்கைத் திட்டத்தில் தெரிவித்துள்ளது.

ஜாதி, மத, பாகுபாடின்றி சகல மக்களுக்கும் சகல துறைகளிலும் சமசந்தர்ப்பமும் வாய்ப்புமளிக்கப்படுமென்றும் அத்திட்டம் கூறுகிறது.

சிங்களமே நாட்டின் ஆட்சி மொழியாக இருக்கும். அதே சமயம் தமிழ் மொழியின் உரிமை பாதுகாக்கப்படும் என்றும் பொதுத் திட்டம் உறுதியளிக்கிறது.

பௌத்தமதத்துக்கு உரிய அந்தஸ்து அளிக்கப்படும் அதேசமயம் இதர சமயத்தவரின் வழிபாட்டுச் சுதந்திரம் பாதுகாக்கப்படுமென்றும் அவர்களுக்கு சுதந்திரம் அளிக்கப்படுமென்றும் அத்திட்டம் தெரிவிக்கிறது.

**தேசிய ஐக்கியம்**

இன்று யு. என். பி - தமிழரசுக் கூட்டுச் சேர்க்கையால் தேசிய ஐக்கியம் உருவாக்கப்பட்டுவிட்டதென்று கூறினாலும் உண்மையான தேசிய ஐக்கியம நிலைநாட்டப்படவில்லையென்றும் சிறுபான்மையினரின் நம்பிக்கை, நல்லெண்ணத்துடன் இந்த நாட்டில் உண்மையான தேசிய ஐக்கியத்தை நிலைநாட்டுவதே தங்கள் நோக்கம் என்றும் அத்திட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

போதனமொழி சுயபாஷைமூலமே இருக்குமென்றும் ஆனால் இதுவரை ஆங்கில க்கல்வி மூலம் கல்விப் போதனை பெற்றுவந்தவர்கள் இனியும் ஆங்கில மூலம் தொடர்ந்து கல்வி போதனை பெறவும் பின்னர் சிங்களத்தில் தேர்ச்சிபெறவும்வாய்ப்பளிக்கப்படுமென்றும்கொள்கைத்திட்டம் கூறுகிறது.

**சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தம்**

சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தம் பற்றிக் குறிப்பிடுகையில் சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தம் எந்த உணர்வுடன் கைச்சாத்திடப்பட்டதோ அதே உணர்வுடன் அமுல் நடத்தப்படுமென்று கொள்கைத்திட்டம் கூறுகிறது. இந்த ஒப்பந்தத்தை அமுல் நடத்துகையில் தங்கள் பிரஜாவுரிமையை தக்க சான்றுகளுடன் நிரூபிக்க முடியாத நிலையிலுள்ள வம்சாவழி இலங்கையரான சிங்களவர்களல்லாத மக்களுக்குத் தொல்லையும் சங்கடமும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளப்படுமென்றும் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி சிறிலங்கா சுதந்திரக்கட்சி, லங்காசமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சியின் கூட்டுறவுடன் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் இலங்கை - இந்திய [சிறிமா சாஸ்திரி] ஒப்பந்தத்தை அமுல்நடத்துவதற்கு தேசிய அரசாங்கம் கொண்டுவந்து நிறைவேற்றிய சட்டத்தையும், தமிழ் மொழிச்சட்ட விதிகளையும் ரத்துச்செய்துவிடுமென்று கருதக்கூடியதாக உள்ளது.

## தெல்லிப்பழை கி. ச. தலைவர் பதவிஇழந்தார்

### சிதம்பரநாதன் புதிய தலைவர்

குரும்பசிட்டி, வெள்ளி

தெல்லிப்பழை கிராம சபைத்தலைவர் திரு. தம்பு செல்வரத்தினம் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறியது. புதியதலைவராக புரக்டர் என். சிதம்பரநாதன் தெரிவு செய்யப்பட்டார்.

கிராமசபையின் தீர்மானங்களை முறையாக செய்யத் தவறியதாகவும் நிர்வாக முறைச் சட்டப்படி செய்யத் தவறியதாகவும் கிராம சபைத் தலைவர் மீது கொண்டுவரப்பட்ட இத் தீர்மானத்துக்கு ஆதரவாக 13 பேர் வாக்களித்திருந்தனர் ஒருவர் எதிர்த்து வாக்களித்தார், தலைவர் நடுநிலைமை வகித்தார். 19 அங்கத்தவர்களில் 15 பேர் மட்டுமே இன்று சமுகமளித்திருந்தனர்.

இன்று காலை கிராமசபை அங்கத்தவர்கள் கூடிய போது வெளியே பொது மக்கள் கூடியிருந்தனர். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. முருகவேள் முன்னிலையில் நம்பிக்கையில்லாத் தீர்மான வாக்கெடுப்பும். புதிய தலைவர்தெரிவும் இன்று நடந்தது

கூட்டம் நடாத்த முடியாதென தலைவரும் திரு. ஈ. நரசிம்மனும் கொண்டுவந்த ஒழுங்குப் பிரச்னையை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் நிராகரித்தார்.

**தலைமை ஆசிரியர் இல்லை; ஆகையால் —**

## ‘கிளிநொச்சி பாடசாலைகளை மூடிவிட உத்தரவிடுங்கள்’

### கல்வி அமைச்சருக்கு பண்டிதர் அவசரத் தந்தி

யாழ்ப்பாணம், சனி

‘கிளிநொச்சியிலுள்ள பாடசாலைகள் பல தலைமை ஆசிரியர்கள் இல்லாமல் இயங்கிக் கொண்டிருப்பதால், அவ்விடங்கள் நிரப்பப்படும்வரை அப் பாடசாலைகளை மூடிவிடும்படி உத்தரவிடுங்கள் என்று கல்விஅமைச்சருக்கு கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் அனுப்பிவைத்துள்ள அவசரத் தந்தியொன்றில் கேட்டுக்கொண்டுள்ளார்.

கிளிநொச்சிப் பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள தலைமை ஆசிரியர் இடமாற்றப் பிரச்னை குறித்து கிளி

(8-ம் பக்கம் பார்க்க)

## ராஜ்ய முதன்மந்திரிகளுடன் பிரதமர் இந்திரா பேசுவார்

### மொழிப் பிரச்னைக்கு தீர்வுகாண முயற்சி

பங்களூர் பெப். 2

மொழிப்பிரச்னை சம்பந்தமாக ராஜ்ய முதன்மந்திரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த உத்தேசித்திருப்பதாக இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி இன்று தெரிவித்தார்.

கேரளம் செல்லும் வழியில் மங்களூர் விமான நிலையத்தில் சிறுது நேரம் தங்கிய திருமதி காந்தியை பத்திரிகை நிருபர்கள் சந்தித்துப் பேசினர்.

தேச ஒற்றுமையை மறந்துவிடாமல் நீண்டகால நோக்குடன் மொழிப்பிரச்னைக்கு ஒரு தீர்வுகாண அணுக வேண்டுமென்று திருமதி காந்தி கூறினார். இந்தியாவின் ‘வடக்கிலென்றாலும் கிழக்கிலென்றாலும் சரி மும்மொழித் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டியது அவசியமென்றார்.

இன்றுள்ள நிலையில் மொழிப்பிரச்னைக்கு தீர்வு காண்பதில் ஒருமித்த கருத்துக்கு வழவகுக்க முடியுமென்றோ நடுவழியொன்று ஏற்படுவதற்கு வாய்ப்பிருக்குமென்றோ சொல்ல முடியாதெனக் கூறிய திருமதி காந்தி எனினும் சமரசத்திற்கான முயற்சியை கைவிடப் போவதில்லையென்றும் சொன்னார்.

## திருமலை மக்களுக்கு சுந்தரரின் வேண்டுகோள்

திருக்கோணமலை, வெள்ளி

சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் திருக்கோணமலையில் நடைபெறும்போது பொலிஸாரின் தாக்குதல் ராணுவத்தினரின் தாக்குதல்களுக்கோ உள்ளாகாதவாறு நடந்து கொள்ளுமாறு ஈழத் தமிழ்இன விடுதலை இயக்கத் தலைவரான திரு. சி. சுந்தரலிங்கம் திருக்கோணமலை மக்களுக்கு வேண்டுகோளொன்றை விடுத்துள்ளார்.

இதுசம்பந்தமாகதிரு. சுந்தரலிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது சுதந்திரதினத்தைதுக்க தினமாக அனுஷ்டிப்பது பற்றியும் இலங்கை அரசியல் சாசனத்தைசுதந்திர தினத்தன்று எரிப்பது பற்றியும் பிரதமரிடம்நான்எழுதியதற்கு பிரதமரிடமிருந்துஒருவிதபதிலும் இதுவரை கிடைக்கவில்லை.

அரசியல்சாசனத்தைஎரிப்பதற்கானஒழுங்களைச்செய்வதற்காக திருகோணமலைக்குநான்மேற் கொள்ளவிருந்த விஜயத்தை இப்போதுரத்துசெய்துள்ளேன்.

சுதந்திரதினத்தன்றுதமிழ் மக்கள் வீட்டினுள் இருந்து பூரணஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். அன்றுதமது பிள்ளைகளைாம்இக்கொண்டாட்டங்களில்கலந்துகொள்ள அனுமதிக்கவேண்டாமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

பொது இடங்களில் கறுப்

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### இனம்

மில்க்வைற் பார் சோப் மேலுறை ஒன்று தபாலில் அனுப்பி வைத்தால் பொக்கட் போயா கலண்டர் இனமாக அனுப்பி வைக்கப்படும். விற்பனை வானிலும் அல்லது தொழிற்சாலையிலும்பெற்றுக்கொள்ளலாம் மில்க் வைற் சோப் தொழிற்சாலை, 527, காங்கேசன் வீதி. யாழ்ப்பாணம். 1863

### இலவசம்

பயிற்சி:

நெசவுவேலை, மரவேலை, தும்புவேலை, கமவேலை, தையல் ஆகிய துறைகளில் 14-18வயதுஇளைஞர்களுக்கு விடுதி வசதியுடன் இலவச பயிற்சி அளிக்கப்படுகிறது விபரங்களுக்கு: காந்தி நிலையம், உருத்திரபுரம்.

1870

### நன்றி கூறல்

திரு. சு. கனகசபை ஜே. பி (சிறுப்பர், யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி அவர்களின் அந்தியக் கிரியையின் போது சமுகமளித்த சகல நண்பர்களுக்கும், உறவினர்க்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோர்க்கும், பலவாறு உதவி புரிந்தவர்களுக்கும் அன்னாரின் குடும்பத்தினர் தங்கள் நன்றியைக கூறிக்கொள்ளுகின்றனர். தனிப்பட்ட முறையில் அறிவிக்க முடியாமைக்கு வருந்துகிறார்கள். கனகசபை அவன்யூ, வண்ணார் பண்ணை. 1864

### விற்பனைக்கு

EY இருநூறு இலக்கத் தொடர் A/40 டெவன், CN ஒன்பதினாயிரம் இலக்கத் தொடர் கில்மன்மிங்ஸ், 55 ஸ்ரீ இரண்டாயிரம் இலக்கத் தொடர் பேர்குசன் ரில்லர், டிறக்ரர் பெட்டி, 2 சட்டிக் கலப்பை, மரம் அரியும் வாள் குறுக்களவு 36''. இவைதிருப்திகரமான நிலையில் உடன் விற்பனைக்குண்டு. ஐறு செங்கல் ஒட்டுத் தொழிற்சாலை, கண்டாவளை. 1865

கோழி:

முட்டை இடும், முட்டை இடும் பருவமுள்ள கோழிகள் விற்பனைக்குண்டு. சிவசாமிப்பிள்ளை, மாணிக்கவாசா, மின்சாரநிலைய வீதி, பருத்தித்துறை.

1869

### கல்வி

1968-ம் ஆண்டு மார்கழி க. பொ. த சாதாரண, வர்த்தகதராதரப் பரீட்சைகளுக்காக சுருக்கெழுத்து, தட்டச்சு, கணக்கியல், வர்த்தகம், பொருளாதாரம், வர்த்தகஎண்கணிதம் முதலியபாடங்களும்(இப்பாடங்களில் பயிற்றப்பட்டவர்கள் உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றலாம்) 1969 சித்திரை க. பொ. த. உயர் தரப்பரீட்சைக்காக தமிழ், கணக்கியல், பொருளாதாரம், வர்த்தக பாடங்கள் முதலியன 46 வருடசேவையுள்ள வர்த்தக ஆசிரியரால் கற்பிக்கப்படுகின்றன. உடன் விண்ணப்பிக்கவும் வர்த்தகக் கல்லூரி, பருத்தித்துறை. 1858

### தேவை

குடும்பம்:

கிராஞ்சியில் 40 ஏக்கர் தென்னம் தோட்டத்தை பராமரிப்பதற்கு ஒரு குடும்பம் தேவை. சி. கோவிந்தசாமி, கந்தரோடை வீதி, சுன்னாகம். 1871

## ஆத்ம சக்தியின் அற்புத சாதனை

மானிப்பாய், வெள்ளி

''வேதாந்த நூல்களிலே பொதிந்திருக்கும் உயர்ந்த அறநெறிக் கோட்பாடுகளை தனது வாழ்க்கை மூலம் வாழ்ந்துகாட்டி, மக்களுக்கு விளக்கி, அவர்களது வாழ்க்கையைச் செம்மையுறச் செய்த தீரர் மகாத்மா காந்தி. அதனாலே தான் அவரை இன்று அனைத்துலகமும் ஏற்றிப் போற்றுகின்றது'' இவ்வாறு கவிஞர் வி. கந்தவனம், மறுமலர்ச்சி நாடக மன்றம் நடாத்திய காந்திஜி நினைவு தினக் கூட்டத்தில பேசுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசுகையில். ''இருபதாம் நூற்றாண்டிலே வாழ்ந்த காந்திஜி அச்சு, புகைப்படம், வானெலி முதலிய விஞ்ஞான சாதனங்கள் அற்ற புராதன காலத்தில் வாழ்ந்து தனது ஆத்மீக பலத்தினல் அரிய சாதனைகளைச் சாதித்திருப்பாரேயானால், இன்று அவரின் வரலாறுகளையும் படிப்பவர்கள் சிலர் அவையெல்லாம்முழுப் பொய்யென்றும் சொல்வார்கள். ஏனெனில் மகாத்மாஜி தனது ஆத்மீக சக்தியினால் அற்புதமான சாதனைகளைச் சாதித்துள்ளார். அறம் நிரம்பிய தெய்வீக வாழ்வை அவர் வாழ்ந்துள்ளார். அவர் இவ்வுலகில் வாழ்ந்தது ஓர் அதிசயக் கனவுபோல மறைந்துவிட்டது. காந்திஜி போன்ற பெரிய மகான் இன்று தோன்றினலே இந்த உலகத்தை நல்வழிக்குத்திருப்ப முடியும்'' என்ருர்.

கூட்டத்திற்குத் தலைமை வகித்த திரு பொ. செல்வரத்தினம் பேசுகையில் உலகம் போற்றும் உத்தமரான காந்திஜி நேர்மையைக் கடைப்பிடிப்பதற்கும் உண்மையைப் பேசுவதற்கும் அஞ்சாத ஆத்மீக பலம் வாய்ந்த தீரராக விளங்கினர் என்ருர். பஜனை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன, திரு. ஆ. மகேஸ்வரன் நன்றி கூறினர்.

அரசாங்க சேவைகள்

பொதுவேலைத் திணைக்களம்

என். 209-வவுனியா ஆஸ்பத்திரிக்கென 24 கட்டில்கள் போடக்கூடிய இலேசான அமைப்புள்ள மாதிரிச் சிகிச்சைக் களம் அமைத்தல். கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளுதலுக்கான கடைசித் திகதி 28-2-68 பிறவிபரங்களுக்கு 2-2-68 அரசாங்க வர்த்தமானி பகுதி I, தொகுதி II ஐப் பார்க்கவும். GP 1461

## கட்டுக் கோப்பான திட்டம்தேவை

யாழ்ப்பாணம், சனி

''இலட்சியநோக்கத்தைச் செயல்படுத்துவதற்கு சங்கத்துக்கென கட்டுக்கோப்பான சட்ட திட்டங்கள் தேவை. சட்டதிட்டங்களை இயக்கத்தில் உள்ளவர்கள் மதித்துப் போற்றினற்ருல் இயக்கத்துக்கு வெளியே உள்ளவர்களும் அதனை ஏற்றுக் கொள்வர். இத்திட்ட அடிப்படையில் நமது கலைக் கதிர் நாடகமன்றம் இயங்குதல் வேண்டும்.''

இவ்வாறு அண்மையில் நடைபெற்ற குருநகர் கலைக் கதிர்நாடகமன்ற வருடாந்த விழாவுக்குத் தலைமைவகித்த திரு கி யேசுராசா குறிப்பிட்டார்.

அடுத்த ஆண்டுக்குரிய நிர்வாக உறுப்பினர்களாகக் கீழ்க்கண்டோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் த. பரமலிங்கம், உப-தலைவர் த பிரான்சிஸ் செயலாளர் பொன்.பொன்ராசா, உப-செயலாளர் ப. சூசைப்பிள்ளை, பொருளாளர் மு.தேவதாஸ். [நி]

## குடத்தனை கிராம வளர்ச்சிக்கு காரணம்

உடுப்பிட்டி, வெள்ளி

''குடத்தனைக் கிராமம் இன்று மிகவும் முன்னேற்றமடைந்துள்ளது இக்கிராம சபையின் நிர்வாகத் திறமையே இத்துரித வளர்ச்சிக்குக் காரணமாகும். திரு மாணிக்கவாசகர் வடபகுதிக்கு பெரும் பணியாற்றியுள்ளார். அவர் அரசாங்க ஊழியனுக மட்டுமிராது பல தொல்லைகளுக்கிடையேயும் பொது மக்களுடன் கலந்து பேசி அவர்களின் குறைகளை அறிந்து அவற்றிற்குப் பரிகாரமளித்துவந்தார்.'

மேற்கண்டவாறு பருத்தித்துறை எம். பி. திரு கே. துரைரத்தினம், வடபகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளராகக் கடமையாற்றி மாற்றலாகிச் செல்லும் திரு. எஸ். வி. மாணிக்கவாசகருக்குக் குடத்தனைக் கிராமசபையால் அளிக்கப்பட்ட பிரிவுபசார வைபவத்தில் பேசுகையில் கூறினர்.

இக்கூட்டத்திற்குக் குடத்தனைக் கிராமசபைத் தலைவர் திரு. நீ. யோ. மரியாம்பிள்ளை ஜே பி. தலைமை வகித்தார்.

புதிய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு எஸ். முருகவேள், திருவாளர்கள் கே. சிவப்பிரகாசம், கே சிவசாமி ஆகியோரும் பேசினர்.

திரு. எஸ். வி. மாணிக்கவாசகர் தமக்களிக்கப்பட்ட வரவேற்பிற்கு நன்றித் தெரிவித்துப் பேசினர் மதியபோசன விருந்துபசாரமும் நடைபெற்றது.

## இச் சந்தி இருளில்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள ஆஸ்பத்திரி வீதியும், முதலாம் குறுக்கு வீதியும் இணையும்சந்திகடந்த வாரத்துக்கு மேலாக இருளில் மூழ்கிக்கிடக்கின்றது.

யாழ்ப்பாணம் பெரிய கடைக்குச் செல்லும் பாதசாரிகள் அந்தச் சந்தியைக் கடந்து கிழக்கு, தெற்கு ஆகிய திசைகளில் இருட்டினூடேதான் செல்லவேண்டியுள்ளது.

இது சம்பந்தமாக சம்பந்தப் பட்டவர்களுக்கு தெரிவிக்கப் பட்டும், இது வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையாம்.

வடபகுதி

## ரலி குமாஸ்தாக்கள் கோரிக்கை

மானிப்பாய், வெள்ளி

கூடுதலான உணவுக் கப்பல்களை வடபகுதித் துறைமுகங்களுக்கு அனுப்புமாறும் திருகோணமலை கொழும்புத் துறைமுகங்களில் தம்மைச் சேவையில் அமர்த்துமாறும் வடபகுதி ரலி குமாஸ்தாக்கள் சங்கம் தேசிய சேவை அமைச்சரைக் கோரியுள்ளது.

மேற்படி சங்கம் அமைச்சருக்கு அனுப்பியுள்ள மகஜரில் குறிப்பிட்டதாவது:-

வடபகுதி துறைமுகங்களுக்குப் போதிய கப்பல்கள் அனுப்பப் படாமையினல் எமது அங்கத்தவர்கள் அதிக இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். சராசரியாக வருடத்துக்கு 9 கப்பல்கள் மாத்திரமே இங்கு அனுப்பப்படுகின்றன. இக் கப்பல்களிலிருந்து இறக்குமதி செய்வதற்கு 140 நாட்கள் செல்லுகின்றன. மிகுதியான நாட்களில் எமது அங்கத்தவர்கள் வேலையற்றவர்களாக இருக்கவேண்டியுள்ளது.

எமது அங்கத்தவர்களில் சராசரியாக 70 நாட்களுக்கே வேலைசெய்கிருர்கள். ஓர் வருடத்திற்கு 420ரூபா என்ற அடிப்படையிலே ஒரு உறுப்பினர் மாதத்திற்கு 35 ரூபாவையே சம்பளமாக பெற்று வருகின்ருர்கள். உணவுத் திணைக்களம் எமது சமாசத்திற்கு வழங்கும்விகிதப்படியே எமக்கு இக்குறைந்த ஊதியம் வழங்கப்படுவதனுல் எமது நிலை மேலும் கஷ்டமானதாக இருக்கிறது.

## புதிய நிர்வாகிகள்

நெடுந்தீவு, வெள்ளி

நெடுந்திவு நாடக மன்றத்தாரின் வருடாந்தப்பொதுக் கூட்டம் சென்ற 28-ம் திகதி நாடகமன்ற மண்டபத்தில் தலைவர் திரு. வே. சபாரத்தினம் தலைமையில் கூடிய போது மன்றத்தின் காரியதரிசி திரு ம. சவிரிமுத்து பேசுகையில் இந்நாடக மன்றத்தின் வளர்ச்சி பற்றியும் எடுத்துக் கூறினர். நிர்வாகிகள்தெரிவில தலைவராதிரு. வே. சபாரத்தினமும், காரியதரிசியாக திரு. ம சவிரிமுத்துவும், உபகாரியதரிசியாக திரு. எஸ் பெனடிக்றும் தனதிகாரியாக திரு, க. சிங்கராசாவும், விளம்பர அங்கத்தவர்களாகதிரு. எஸ். இராஜேந்திரம், திரு. கே, குணரட்ணம. ஆகியோரும் தெரிவு செய்ப்பட்டனர்.


'' அதிக நெல்லை வெட்டிட தரமான அரிவாளைத்தேடுங்கள்! ''

குரங்கு மார்க் அரிவாள்கள்

இங்கிலாந்தில் விசேஷ ஆராய்ச்சி முறையில் தயாரிக்கப்பட்டவை.

இன்னும்

உங்கள் கட்டிடங்களுக்குத் தேவையான

★ கம்பி வகைகள் ★ பூட்டு - பிணைச்சல் வகைகள்

★ யானை மார்க் அஸ்பெஸ்டஸ் சீற் வகைகள்

★ பி. வி. ஸி. பைப் வகைகள், பைப் இணைப்புகள் முதலியனவும்

குரங்கு மார்க் தோட்ட மண்வெட்டிகள்

யாவும் எம்மிடம்

கொழும்பு விலைக்கே பெற்றுக்கொள்ளலாம்.



'' ஸ் டீ ல் ச ன் ஸ் ''

( 'குரங்கு மார்க்' மண்வெட்டி ... இலங்கையின் ஏகவிநியோகஸ்தர்கள் )

287 - 289, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அமெரிக்க ஜனாதிபதி ஜோன்சன் எச்சரிக்கை;

# “கம்யூனிஸ்ட் தாககுதல் நீடிக்கும் வரை குண்டு வீச்சை நிறுத்தமாட்டோம்”

## தென் வியட்னமில் கடுர் சண்டை தொடர்ந்து நடக்கிறது

வாஷிங்டன், பெப். 2

தென்வியட்னமின் தலைநகரான சைகோனிலும், மற்றும் சிலநகரங்களிலும் வியட்காங்கியரின் கடும் தாக்குதல் மூன்றுவது நாளான நேற்றுத் தொடர்ந்து நடத்திக்கொண்டிருந்தபோது, அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்சன் வெள்ளை மாளிகையில் உயர்தர அதிகாரிகளுடன் நீண்டநேர ஆலோசனை நடத்திய பின்னர் கடுமையான எச்சரிக்கையொன்றை விடுத்தார்.

தென் வியட்னமுக்குள் கம்யூனிஸ்ட்டுக்களின் ஊடுருவலும், தாக்குதலும் நடக்கும் வரை வட வியட்னம்மீதுகுண்டு வீசுவதை அமெரிக்கா ஒரு பொழுதும் நிறுத்த மாட்டாதென ஜனாதிபதி ஜோன்சன் எச்சரித்தார்.

வியட்காங் படையினரின் தாக்குதல் தென் வியட்னம் தலைநகரான சைக்கோனிலும், மற்றும் சில நகரங்களிலும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் செய்திகள் கிடைத்துள்ளன. 5 வியட்காங் படையினர் கடும் சண்டையில் குதித்துள்ளனர்

வியட்காங்தரப்பினர்கைப் பற்றிய பிளிங்கு நகரை மீண்டும் பறித்துக் கொண்டு விட்டதாக அமெரிக்க ராணுவ அதிகாரி ஒருவர் நேற்றிரவு தெரிவித்தார்.

நடப்புப் போரில் சுமார் பத்தாயிரத்து ஐநூறு பேர் வியட்காங், கம்யூனிஸ்ட்டுகள் மாண்டுபோய் விட்டதாகவும், தென்வியட்னம் தரப்பில் 500 பேர் அளவிலேயே இறந்துள்ளதாகவும் அமெரிக்க ராணுவ அதிகாரி ஒருவர் தகவல் தந்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி திரு ஜோன்சன் வெள்ளை மாளிகையில், தென் வியட்னம் நிலைமை குறித்து யு. எஸ். காங்கிரஸின் பலத்த ஆலோசனை நடத்திக் கொண்டிருக்கிறார்.

தென். வியட்னமில் நேற்றிரவு 24 மணிநேர அவசரகால சட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பொது மக்கள் எவரையும் வீட்டைவிட்டு வெளியேறக் கூடாதென தென்வியட்னம் பிரதமர் கேட்டுக் கொண்டுள்ளார். பத்திரிகைத் தணிப்பும் நடைபெறுவதற்கான உத்தரவையும் தென்வியட்னம் பிரதமர் பிறப்பித்துள்ளார்.



## ‘ஒரு கோணத்தில் மட்டும் பத்திரிகைகள் நோக்கலாகாது’

புதுடில்லி, பெப். 2

பத்திரிகைகள் மக்கள் நலனையே பெரிதும் கருத்தில் கொண்டு சேவையாற்ற வேண்டும். நாட்டில் நடக்கும் நல்லவற்றையும், நன்மையான காரியங்களையும் விட்டு கூடாத ஒரு கோணத்திலே நோக்கி அதனை எழுதுவது இன்றைய பத்திரிகைத் தர்மமாகிவிட்டது. இந்நிலை மாறவேண்டும் என்று பிரதமர் ஸ்ரீமதி இந்திராகாந்தி இந்தியன் பிரஸ்ரெஸ்ட் ஸ்தாபன புதிய கட்டத்துக்கான அடிக்கல்லை நேற்று நாட்டிப்பேசுகையில் சொன்னார்.

90 லட்சம் ரூபாய் செலவில் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள இப் புதிய திட்டத்துக்கான அடிக்கல்லை நாட்டுவதற்கு ஐ நா. பொதுக்காரியதரிசி திரு. யுதாண்ட். இங்கு வருவதாகவிருந்தார். ஆனல் கடைசிநேரத்தில் ஏற்பட்ட கொரியா பிரச்னையைத் தொடர்ந்து இந் நிகழ்ச்சியை திரு. யுதாண்ட் ரத்துசெய்ய வேண்டியதாகி விட்டது.

‘ஆசியாவிலே மிகப்பெரிய செய்தி ஸ்தாபனமான இந்தியன் பிரஸ்ரெஸ்ட்’. அது பாரதத்துக்குப்பெருமையை தேடிக் கொடுக்கிறது” என்று யுதாண்ட் அனுப்பி வைத்துள்ள செய்தியொன்றில் தெரிவித்துள்ளார்.

## அபிவிருத்தியடைந்த நாடுகள் மீது ஸ்ரீமதி இந்திரா கண்டனம்

புதடில்லி, பெப். 2

நேற்று ஆரம்பமான ஐ. நாவின் இரண்டாவது வர்த்தக அபிவிருத்தி சம்பந்தமான 2-வது சர்வதேச மகாநாட்டின் பொது விவாதம் திங்கட்கிழமை நடைபெறும். நேற்றுப் பிற்பகல் மகாநாட்டின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட இந்திய வர்த்தக அமைச்சர் திரு தினேஷ்சிங்கின் தலைமையில் முழுக் கூட்டமும் நடைபெற்றது.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பிரேரணைகளை ஆராய்வதற்கென நேற்றுக் கமிட்டிகள் தெரிவு செய்யப்பட்டன.

பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தி அபிவிருத்தி அடைந்த நாடுகளின் போக்கை கண்டித்தார்.

“செல்வாக்குப் பெற்றுள்ள அபிவிருத்தி அடைந்த நாடுகள் அபிவிருத்தி அடையும் நாடுகளுக்கு உதவி செய்வதை விடுத்து. தமக்குள்ளேயே உதவிகளைப் பரிமாறிக் கொள்கின்றன” என்று கூறிய பிரதமர் இந்திரா, “அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கும், அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்குமிடையேயுள்ள இடைவெளி குறைந்து, நெருங்கிய ஒத்துழைப்பு ஏற்பட வேண்டும்” என்று கூறினர்.



இன்று காலையிலிருந்து மீண்டும் மகாநாடு தொடர்ந்துநடைபெறுகிறது. 132 உலக நாடுகள் இம்மகாநாட்டில் பங்கு பற்றுகின்றன.

### மார்க்கிரேட்டுக்கு ஆப்ரேஷன்

லண்டன், பெப். 2.

இரண்டாவது எலிசெபெத் மகா ராணியாரின் தங்கை இளவரசி திருமதி மார்க்கிரேட்டுக்கு இன்று உள் நக்கு ஆப்பரேஷன் செய்யப்பட்டது. லண்டனிலுள்ள தனிப்பட்டவைத்திய சாலையொன்றில் இவ் ஆப்ரேஷன் நடந்தது.

### பனிச்சரிவு

ஜம்மு, பெப். 2.

ஸ்ரீ நகர் பள்ளத்தாக்கு நாட்டின் இதர பகுதிகளிலிருந்து அடியோடு துண்டிக்கப்பட்டிருக்கிறது.

கடுமையான பனிச் சரிவால், நிலச்சரிவுகள் ஏற்பட்டிருப்பதன் விளைவாகசெய்தி தொடர்புசீர்குலைந்துள்ளது. ஜம்மு — ஸ்ரீநகர் வீதியில் போக்குவரத்துநிறுத்தப்பட்டுள்ளது. பெருஞ்சேதம் ஏற்பட்டுள்ளது.

## சூயஸில் அகப்பட்ட பதினைந்து கப்பல்களின் நிலை

### மீட்புவேலையை அரபு குடியரசு ஏற்க மறுப்பு

நியூயார்க், பெப் 2

சூயஸ்கால்வாயில் அகப்பட்டுள்ள 15 கப்பல்களின் நிலை இப்போது மிகவும்இக்கட்டான நிலையிலுள்ளது இக்கப்பல்களை மீட்கும் பொறுப்பை ஐக்கிய அரபுக் குயடிரசு ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்திருந்தது. ஆனல் இஸ்ரேலுக்கும், ஐக்கிய அரபுக்குடியரசுக்குமிடையே மீண்டும் தலைதூக்கிய பிரச்னைகளைத் தொடர்ந்து. ஐக்கிய அரபுக் குடியரசு மீட்புவேலைகளைச் செய்வதற்கு மறுத்துவிட்டது.

யுதாண்ட் இதுசம்பந்தமாக தெரிவிக்கையில்15 கப்பல்களும் அனுதரவான நிலையிலேயே இருக்க வேண்டிய நிலை யேற்பட்டுள்ளதாகவும் இப்பிரச்னைபெரும் பிரச்னையாகிக் கொண்டுபோகிறதென்றும் கூறினர்.

கடந்தவருடம் ஜூன் மாதம் இஸ்ரேலுக்கும், அரபு நாடுகளுக்குமிடையில் நடைபெற்ற போரைத் தொடர்ந்து 9 நாடுகளைச் சேர்ந்த 15 கப்பல்கள் சூயஸ்கால்வாயில் சிக்கிக்கொண்டுள்ளன.

## துப்பா ராக்கெட் தளம் ஐ. நா. வுக்கு அர்ப்பணம்

திருவனந்தபுரம், பெப். 2

கேரளத்திலுள்ள தும்பா ராக்கெட் தளம் ஐ. நா. வுக்கு இன்று மாலை அர்ப்பணம் செய்யப்பட்டது. பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தி தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது. பல நாடுகளையும் சேர்ந்த 100 விஞ்ஞானிகள் இந் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

இதுவரைகாலமும் தும்பா ராக்கெட் நிலையத்தில் முழுக்க முழுக்க பாரத விஞ்ஞானிகளே பங்குகொண்டுவந்துள்ளனர். இவர்களில் 10 பேர் வெளிநாட்டில் பயிற்சி பெற்றவர்களாவர்.

பாரதத்துக்கு ஐ நா. அளிக்கும் உதவிகளுக்கு பாரதப் பிரதமர் ஸ்ரீமதி இந்திராகாந்தி நன்றிதெரிவித்தார்.

ஐ நா. உதவிக்காரியதரிசி, மற்றும் வெளிநாட்டு பிரதிநிதிகள் உட்பட பலர் தும்பா ராக்கெட்நிலைய அர்ப்பணவிழாவில் கலந்து கொண்டனர்.

### கொஸிஜின் ரஷ்யா வந்து சேர்ந்தார்

மாஸ்கோ, பெப். 2

சோவியத் ரஷ்யப் பிரதமர் திரு. கொஸிஜின் நேற்றுத் தாயகம் வந்து சேர்ந்தார். பாரதத்தில் தனது விஜயத்தை முடித்துக் கொண்டு, அங்கிருந்து வரும் வழியில் ஆப்கானிஸ்தானுக்கும் சென்று விட்டு இங்கு வந்து சேர்ந்தார்.

“பாரதப் பயணம் எனக்குப் பெரிதும் மகிழ்ச்சியை அளித்துள்ளது இரு நாடுகளுக்குமிடையே மேலும் உறவுகளை ஏற்படுத்தக் கூமய விதத்தில் இவ்விஜயம் அமைந்துள்ளது.” என்று இங்குள்ள பாரத பொறுப்பதிகாரியிடம் சோவியத் பிரதமர் திரு. கொஸிஜின் ... இந்திராகாந்திக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுங்கள்” என்று சொன்னர்.

## கொழும்பில் நடைபெறவிருக்கும் விஞ்ஞான ஆராய்ச்சி மகாநாடு

### பிரிட்டிஷ் விஞ்ஞான குழு இங்குவரும்

கொழும்பு, வெள்ளி

சாம்ராஜ்ய விஞ்ஞான ஆராய்ச்சிக கமிட்டியின் மகாநாடு ஒன்று அடுத்த மாதம் கொழும்பில் நடைபெறவிருக்கிறது இலங்கை விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெறவிருக்கும் இந்த மகாநாட்டை மகாதேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லவா ஆரம்பித்துவைப்பார்.

இந்த மகாநாட்டில் கலந்துகொள்ளும் முகமாக 6 பிரிட்டிஷ் விஞ்ஞானிகளைக் கொண்ட குழுவொன்று அடுத்த மாதம் 6ந் திகதி கொழும்புக்கு வருகிறது.

பிரிட்டிஷ் தேசிய விண்வெளி ஆராய்ச்சிக் கமிட்டியின் தலைவர் சேர் ஹரி மாஸே இந்த பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் கோஷ்டிக்குத் தலைமை தாங்குவார்.

பிரிட்டன் உட்பட இந்தியா, பாகிஸ்தான், கனடா அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து போன்ற நாடுகளைச் சேர்ந்த பிரபல விண்வெளி விஞ்ஞானிகள் இந்த மகாநாட்டில் கலந்துகொள்வார்கள்.

இந்த மகாநாட்டிற் பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் குழுத் தலைவரான சேர் ஹரி தலைமைதாங்குவார். லண்டன் சர்வகலாசாலைக் கல்லூரியைச் சேர்ந்த டாக்டர் ஜீ வி. குரோவ்ஸ், பிரிட்டிஷ் விஞ்ஞான சபையின் வானொலி ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த டாக்

6-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

பணிவுடனிருங்கள். எல்லா உயிர்களையும் மானசீகமாக வணங்குங்கள். பகட்டு, செருக்கு, வெளிவேடம் ஆகியவற்றை அகற்றுங்கள்.

— சுவாமி சிவானந்தா


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 889

யாழ்ப்பாணம் பிலவங்கஹு தை மீ 20வ. (3-2-68)


## விவேகமான செயல்

திருக்கோணமலையில் நாளை சுதந்திரதினவிழாக் கொண்டாடப்படும் பொழுது ஆத்திரமூட்டக்கூடிய முறையிலோ, பொலிசார், இராணுவத்தினர் 'தாக்குதல்' நடத்துவதற்கு வழிவகுக்கக்கூடிய முறையிலோ நடந்துகொள்ள வேண்டாமென்று ஈழத் தமிழர் இன விடுதலை இயக்கத் தலைவர் திரு. சி. சுந்தரலிங்கம் திருக்கோணமலை மக்களுக்கு விடுத்துள்ள ஒரு வேண்டுகோளில்கேட்டுள்ளார். சுதந்திர தினத்தை துக்கதினமாக அனுஷ்டிக்கும்படி திரு. சுந்தரலிங்கம் முன்னர் வேண்டுகோள் விடுத்திருந்தார். துக்க ஊர்வலம் நடத்தவும் அரசியல் சாஸனப்பிரதியொன்றை தீ வைத்துக் கொளுத்தவும் விடுதலை இயக்கம் திட்டமிட்டிருந்தது. ஊர்வலத்துக்கும் கூட்டத்துக்கும் அனுமதி மறுக்கப்பட்டதைத் தொடர்ந்தே திரு. சுந்தரலிங்கம் மேற்கண்ட வேண்டுகோள் விடுத்திருக்கிறார். 1958-ம் ஆண்டிலும் அதற்கு முன்னர் நிகழ்ந்த சம்பவங்களும் திருக்கோணமலையிலேயே சுதந்திர. துக்கதின வைபவங்களில் இருவர் உயிர் நீத்ததும் மறந்துவிடக்கூடிய விஷயங்களல்ல. எனவே அமைதியைப் பாதுகாக்குமாறும் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகள் எதையும் செய்யவேண்டாமென்றும் திரு. சுந்தரலிங்கம் வேண்டுகோள் விடுத்திருப்பது விவேகமானதும் பாராட்டுக்குரியதுமாகும்.

இலங்கை அரசியல் சுதந்திரம் பெற்று இருபதாண்டுகளாகியும்கூட இந்நாட்டில் வாழும் சிறுபான்மையினர் குறிப்பாக தமிழ்மக்கள் அந்தச் சுதந்திரத்தைப் பூரணமாக அனுபவிக்கிறார்களென்று கூறமுடியாது. இதற்கு இன்றைய அரசாங்கத்தை மட்டும் குறைகூறியும் பயனில்லை. இதற்காக தமிழ் மக்கள் துக்கம் அனுஷ்டிப்பதால் இழந்த சுதந்திரத்தைப் பெற்றுவிட முடியுமென்று எதிர்பார்க்கவும் முடியாது. துக்கதினம் அனுஷ்டிப்பதன்மூலம் பெரும்பான்மைச் சமூகத்தினருக்கு தமிழ் மக்கள் தங்கள் நிலையை எடுத்துக் காட்டி உணர்த்திவிட முடியும் என்றும் நம்ப முடியாது. இதற்கு மாருக அவர்களுடைய ஆத்திரத்தைத் தூண்டத்தான் இது உதவும்.

உரிமைக்காகப் போராடும் அதே சமயம், இந்நாட்டுக்குக் கிடைத்த சுதந்திரம் ஒரு சமூகத்துக்கு மட்டும் கிடைத்ததல்லவென்றும் மக்கள் அனைவருக்கும் அதில் பங்கிருக்கிறதென்றும் திருக்கோணமலை நகரசபைத் தலைவர் தெரிவித்திருப்பதும் சுதந்திரதினத்தைக் கொண்டாடுவதென திருமலை நகரசபை தீர்மானித்திருப்பதும் வரவேற்கத்தக்க விவேகமான செயலேயாகும்.

'சுவர் இருந்தால்தான் சித்திரம் தீட்டலாம்'. நாட்டின் சுதந்திரம் நிலைபெற்றால்தான் உரிமைகளைப் பெறவும் உரிமைப் போராட்டம் நடத்தவும் முடியும்.

நாட்டில் அமைதி நிலவவும் நாடு முன்னேறவும் சிறுபான்மையினரின் உதவியும் ஒத்துழைப்பும் அவசியம் என்பதை பெரும்பான்மை மக்கள் உணர்ந்துவருகின்றனர். இந்த உணர்வை வலுப்படுத்த வேண்டுமே தவிர குறைத்துவிடக்கூடாது.

சிறுபான்மையினரை மதித்து அவர்களின் ஒத்துழைப்பைப் பெரும்பான்மையினர் பெறுவதிலும், பெரும்பான்மையினரோடு ஒத்துழைத்து நல்லெண்ணத்துடனும் நல்லுறவுடனும் சிறுபான்மையினர் வாழ்விலும்தான் நாட்டின் அமைதியும் முன்னேற்றமும் தங்கியிருக்கிறது. இதைப் பெரும்பான்மையினரும் சிறுபான்மையினரும் உணர்ந்து நடந்துகொள்ள வேண்டும்.

---

## சர்வோதய கருத்தரங்கு

யாழ்ப்பாணம், சனி

மகாத்மாகாந்தி ஜியின் நினைவு தினத்தையொட்டி சங்கானை சிவப்பிரகாச வித்தியசாலையில் சர்வோதய நினைவுக் கருத்தரங்கு ஒன்று இம்மாதம் 5-ம் திகதி நடைபெறவிருக்கிறது.

இக்கருத்தரங்கில் சர்வோதயக் கொள்கை மக்களுடைய சக வாழ்வுக்கு எவ்வாறு உறுதுணை பயக்கின்றதென்றும் மக்கள் நன்னிலையில்வாழ்வதற்கு காந்திஜியின் நெறிகள் எவ்வளவுக்குப் பயன்தருமென்பது பற்றியும் கருத்தரங்கில் விவாதிக்கப்படும். இக்கூட்டத்துக்கு வலிகாமம் மேற்கு பகுதி காரியாதிகாரி திரு. மாணிக்க நடராசா தலைமை தாங்குவார். [நி]

---

## அப்பீலிலும் அதே தீர்ப்பு

வல்வெட்டித்துறை, வெள்.

ம. அருணுசலம் என்பவர் பருத்தித்துறையில் ஒரு வீட்டை உடைத்து களவாடிய குற்றத்திற்காக பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசாவால் மூன்று மாதச் சிறைத்தண்டனையும் ரூபா 100 அபராதமும் விதிக்கப் பட்டிருந்தது. எதிரியான அருணுசலம் தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்து இருந்தார் அப்பீலில் அத் தீர்ப்பே சரியென அறிவிக்கப் பட்டதைத் தொடர்ந்து மாஜிஸ்திரேட் எதிரியை மூன்று மாதச் சிறைத் தண்டனையும் ரூபா 100 அபராதம் செலுத்தும் படியும் உத்தரவிட்டுள்ளார். அபராதம் செலுத்தத் தவறினுல் மேலும் ஒரு மாதம்சிறைத் தண்டனை அனுபவிக்கும் படியும் உத்தரவிட்டுள்ளார்.

---

தீவுப்பகுதி

## மோட்டார் படகு சேவையை மராமத்து இலாகாபொறுப்பேற்கும்?

### அனலை முற்போக்கு வாலிபர் இயக்கம் அரசாங்க அதிபருக்கு மகஜர்

— நமது நிருபர் ச. க. காசிலிங்கம் —

அனலைதீவு, வெள்ளி

தீவுப்பகுதி மோட்டார்ப் படகுச்சேவையைத் தேசியமயமாக்கி, இலங்கைப் போக்குவரத்துச் சபையிடம் கையளித்து, தீவகங்களில் நிலவிவரும் போக்குவரத்துக் கஷ்டங்களை நீக்கும் வண்ணம் தேசியமய சேவைகள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியை அனலைதீவு வாலிபர் இயக்கம் கோரியிருந்தும் அது பலனளிக்காது போகவே தொடர்ந்து பொதுமராமத்து இலாகாவுடன் தொடர்பு கொண்டதைத் தொடர்ந்து இம்மோட்டார்ப் படகுச்சேவையைப் பொதுமராமத்து இலாகா பொறுப்பேற்பதால் ஏற்படும் விளைவுகள் பற்றித் தீவுப்பகுதி எம். பி. திரு வி. நவரத்தினத்தின் ஆலோசனையின்பேரில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரிஞல் மகாநாடு கூட்டப்பட்டு விஷயங்கள் ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது

மேலும் இறுதி முடிவேற்படும்வரை தற்போது இச்சேவையை நடாத்திவரும் தீவுப்பகுதி மோட்டார் வள்ளக் கூட்டுறவுச் சங்க ஒழிப்போர்களையே தொடர்ந்தும் இதனை நடாத்திவருவதற்கு யாழ் மேற்பாகக் கூட்டுறவுஅபிவிருத்தி உதவி ஆணையாளர் அனுமதித்திருந்ததாகவும், சங்க ஒழிப்பாளர்களுக்குக் கொடுக்கப்பட்ட காலவரையறை முடிந்து பல மாதங்களாகியும் இதுவரை எதுவித முடிவும் கிடைக்காததால் மக்கள் அதிருப்தியடைந்துள்ளதாகவும் அறியப்படுகிறது. இக்காலவரையறை மேலும் 6 மாதங்களுக்கு அதிகரிக்கப்பட்டு ஒரு மனேஜரின்கீழ் இயங்க ஏற்பாடாகியுள்ளதாகத் தெரிகின்றது.

நெடுந்தீவு-குறிகாட்டுவான் சேவையை நடாத்தும் பொதுமராமத்து இலாகாவினர் இச்சேவையையும் எடுத்து நடாத்திஞல் தற்சமயம் அறவிடப்படும் கட்டண விகிதம் அரசினரால் ஓரளவேனும் குறைக்கப்படுமெனவும், இதஞல் நயினதீவு, எழுவைதீவு, அனலைதீவுப் பிரயாணிகள் குறைந்த செலவுடன் பிரயாணம் செய்ய வசதியாயிருக்குமெனவும் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

அத்துடன், அனலைதீவில் தனிப்பட்டவர்களின்மோட்டார்ப் படகுகள்கூட இரவு வேளையில் அவசர கருமத்துக்கு வாடகைக்குப் பிடித்துச் செல்லமுடியாதிருக்கின்றது. திடீர் சுகவீனம் காரணமாக நோயாளர்களை வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லமுடியாத நிலையும்தஇஞல்ஏற்படுகிறது இதற்குக் காரணம் மோட்டார் வள்ள ஐக்கிய சங்கத்தினருக்குச் சொந்தமான படகோ அல்லது தனிப்பட்டவரின் படகோ இங்கு கட்டப்படாமல் இருப்பதேயாகும்.

ஒரு படகு அனலைதீவில் இரவு வேளையில் கட்டப்படுவதால் காலை 6-30 மணிக்கு முன்போன்று வெளியூர் உத்தியோகத்தர்களின் வசதிக்காக ஒரு சேவையை நடத்தவும், அதன்மூலம் பிரயாணக்கஷ்டம் ஓரளவாவது நீங்குமெனவும், இரண்டாவது படகு காலை 8-15க்கு அனலைதீவிலிருந்து புறப்பட்டால் சுலபமாக இருக்குமெனவும் பிரயாணிகள் தெரிவிக்கின்றனர். இப்போது காலையில் புறப்படும் மோட்டார்ப் படகு காலவரையறையின்றி புறப்படுவதாகவும், பல பிரயாணிகள் படகைத் தவறவிட்டுத் தவிப்பதாகவும் தெரியவருகிறது.

இச்சேவையைப் பொதுமராமத்துஇலாகா பொறுப்பேற்பது பற்றிய முடிவை விரைவில் தமக்குத் தெரிவிக்குமாறு அனலைதீவு முற்போக்கு வாலிபர் இயக்கம் யாழ்ப்பாண அரசாங்க அதிபரை ஒரு மகஜர் மூலம் கேட்டுள்ளது.

---

## கோஷ்டி சண்டையில் மூவருக்கு காயம்

சங்கானை, வெள்ளி

நிச்காமத்திலும், பண்டத்தரிப்பிலும் ஏற்பட்ட கலவரங்களில் துப்பாக்கிச் சூட்டுக்காயத்துடனும் கத்தி வெட்டுக் காயத்துடனும் யாழ்ப்பாணம்பெரியாஸ்பத்திரியில் இருவரும் காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் ஒருவரும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பண்டத்தரிப்பில் நிகழ்ந்த கலவரத்தில் நிச்காமம்வாசியான பொன்னையா சற்குணம் என்பவர் கத்திவெட்டுக்கிலக்காகிப் பலத்த காயங்களுடன் காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். மற்றும் நிச்காமத்தில் நடந்த கலவரத்தில் வன்னியர் குமரேசர் என்பவர் துப்பாக்கிக்சூட்டுக்கிலக்காகி யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். இவரது நிலைமை கவலைக்கிடமாகவிருப்பதாக அறியப் படுகிறது. இக்கலவரத்தில் மற்றொருவரான காசிலிங்கம் இராசதுரை என்பவரும் வெட்டுக் காயங்களுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவர் ஒரு வைத்தியாலம்வரை இக்கலகம் நீடித்ததாகத் தெரிகிறது.

இதுசம்பந்தமாக சந்தேகத்தின்மீதுஒருகார் உட்பட சங்கானைகிழக்கைச் சேர்ந்த கோவிந்தர் ஆறுமுகம், எஸ். சுப்பையா, ஏ. ஆறுமுகம், குருநாதர் சுப்பிரமணியம் ஆகியோரைப் பொலிசார் தேடிவருகின்றனர். காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபர் திரு. வியனகே சங்கானைக்கு விஜயம் செய்து சங்கானைச் சந்தையிலும் நிச்காமத்திலும்உடனடியா தற்காலிக பொலிஸ் நிலையம் அமைக்க ஏற்பாடு செய்தார். சங்கானைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. டயஸ் சந்தேக நபர்களைத் தேடுவதில்பெருமுயற்சி மேற்கொண்டுள்ளார்.

---

## புறக்டராஞர்

உடுவில், வெள்ளி

சுதுமலை தெற்கைச் சேர்ந்த திரு. நாராயணபிள்ளை முத்துவிநாயகம்புறக்டராகியுள்ளார். கடந்த மாதம் இவர் உயர்நீதிமன்ற நீதியரசர்முன்னிலையில்புறக்டராகச் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

---

## 'குடும்பக்கட்டுப்பாட்டுத்தி[ட்டம்] நமக்கு அவசியமில்லை; ஆ[...]

உடுவில், வெள்ளி

"மேற்கு நாடுகளில்ஜனத்தொகை குறைய, கீழைத்தேய நாடுகளில் ஜனத்தொகை மின்னல் வேகத்தில் பெருகி வருவதைக்காணலாம். உலகத்தின் எந்த ஒரு நாட்டை எடுத்துப் பார்த்தாலும் ஜனத்தொகை அதிகரிப்பு ஒரு மலைப் பிரச்சனையாகத் தான் இருக்கிறது. எனினும் பல நாடுகள் இதனை நிலையான பொருளாதாரத் திட்டத்தை வகுத்துக் கொள்வதால் மக்களை இப் பிரச்சனையிலிருந்து விடுவித்துக்கொள்கின்றன. எமது நாட்டில் நிலையான ஒரு பொருளாதாரத் திட்டம் ஏற்படவில்லை. அதஞல் தான் ஜனத்தொகை அதிகரிப்பு ஒரு பெரும் பிரச்சனையாக இங்கு கணிக்கப்படுகிறது. நாட்டின் பொருளாதாரத்தைப் பெருக்க சிறந்தவொரு திட்டம் வகுக்கப்பட்டால் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் நமக்கு அவசியமில்லை என்பது புலஞகும்" என சுன்ஞகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி உயர்தர மாணவர் சங்கக் கூட்டத்தில் "குடும்பக் கட்டுப்பாடு[...]
உரை நிகழ்த்திய[...]
அப்பாத்துரை[...]
மாணவர் மன்ற[...]
திரு. எம். கே. [...]
தலைமையில் கூட[...]
பெற்றது.

திரு. இ. அப்[...]
மேலும் கூறியதா[...]
உலக நாடுகளி[...]
தொகைப் பிரச்[...]
தாவது இடம்[...]
நமது நாடு இங்[...]
ரத்துக்குஅதிகமா[...]
தாரிகள் வேலையி[...]
கின்றனர். பொரு[...]
துறையில் மட்டு[...]
வித்துறையில் கூட[...]
சிரானதிட்டம் வ[...]
வில்லை.

ஜனத்தொகை[...]
என்ற ஒருகாரண[...]
குடும்பக் கட்டுப்[...]
செயல் படுத்தல்[...]
டென்மார்க்கில்[...]
பும், ஜப்பானில்[...]
தல் முறையும்[...]
வில் தச்சு, கொ[...]
ளும் மாணவ[...]
போதிக்கப் படு[...]
தொழில்வாய்ப்பு[...]
ற்ருல் அங்குநி[...]
நமது நாட்டில்[...]
கல்வித்திட்டங்க[...]
வில்லை. மாணவர்[...]
யோக நிலைகளில்[...]
ம்புகிருர்கள். உ[...]
மின்றியே குடு[...]
லாருகின்றனர்.

நமதுஅரசாங்க[...]
துறைகளில் படி[...]
யற்றிருக்கும் வ[...]
க்கு வேலைவாய்ப்[...]
டுத்திக் கொடுக்க[...]
அதற்கான முறை[...]
வித்திட்டம் பொ[...]
த்திட்டத்தோடு[...]
பட்டு அமுலாக்[...]
வேண்டும். அப்பே[...]
பக்கட்டுப்பாட்டுத்[...]
துக்கு அவசியமே[...]

---

### இன்றைய பலன்

[3-2-68]

சனிக்கிழமை

[தை மீ 20 வ]

திதி- பஞ்சமி இரவு 1-03 மேல் ஷஷ்டி.

நட்சத்திரம்- உத்தரட்டாதி மாலை 5-11 மேல் ரேவதி

ராகுகாலம்- 9-36 – 11-06

சுபநேரம்- 3-36 — 5-06

---

இன்று பிறந்தவர்களுக்கு மாணவர்களுக்கு இவ்வாண்டு மகிழ்ச்சிநிறைந்ததாகவே இருக்கும். மணவாழ்வில் ஈடுபட்டவர்களுக்கு நீண்ட சிந்தனைக்கு இடமுண்டு. காதலர் வாழ்வில் திடீர் திருப்பங்கள் தோன்றிமறையும். வர்த்தகர்களுக்குப் பல புதிய வாய்ப்புக்கள் கிட்டும். பொருளாதாரத்துறையில் புதுவழி பிறக்கும்.

---

மேஷம்-நிதியில் அபிவிருத்தி. நிம்மதி பிறக்கும்.

ரிஷபம்- நினைத்தது தடைப்படல், தாழ்வு மனப்பான்மை.

மிதுனம்- தாய்வழிப் பெருமை, தரமான வாழ்வு.

கடகம்- உள்ளத்தில் உவகை, உறவு பூண்டு.

சிம்மம்- கழுகுப் பார்வை, கவலையின் தாக்குதல்.

கன்னி- வாழ்வுப் பயணத்தில் வளமான திருப்பம்.

துலாம்- தொழிலில் தொல்லை, துன்பம் தொடரும்.

விருச்சிகம்- தெய்வ குருபக்தி. தேடியது கிடைக்கும்.

தனுசு- உழைப்பினுல் உயர்வு, உண்மையின் வெற்றி.

மகரம்- பொருள் வரவு புதினம் கேட்டல்.

கும்பம்- புதிர்போடும் மனம், இக்கட்டான சூழ்நிலை.

மீனம்- முகமன் கூறுவோர் கண்டு மோனத்தில் மூழ்கிவிடு.

— சோதிடக்கலாநிதி —
திருமலை வேலுப்பிள்ளை

---

### ஏமாற்றுவ[...] வளர்ச்[...]

சுழிபுரம்,[...]
மக்கள் தங்க[...]
களே ஏமாற்றக்[...]
வுக்குஇன்றுவர்ளக்[...]
துள்ளார்கள். எவ்[...]
லும் குறுக்குவழிக[...]
எண்ணமுடைய வர்[...]
வுள்ளனர். பாலில்[...]
கலப்பதால் பால்[...]
வது இல்லை அதை[...]
பவர்கள்தான் நஷ்[...]
கின்றனர். அரச[...]
கொள்வனவு செய்[...]
சுத்தமாகவும்' ெ[...]
சத்துள்ளதாகவும்[...]
வேண்டும். அதற்கு[...]
யைபின்பற்றவேண்[...]
பகுதிசுகாதார, கா[...]
விவசாயஉத்தியோ[...]
களின் ஆலோசனை[...]
பெறவேண்டும். அ[...]
பால் மாடுகளை வ[...]
பாலைப்பெறவேண்டு[...]
பாலைக் கொடுக்க[...]
முடியும்என்றஉறுதி[...]
வேண்டும்.

இவ்வாறு வலி[...]
மேற்குஐக்கியபாற்[...]
சங்கத்தில்நடைபெ[...]
தாரக்கருத்தரங்கில்[...]
கொடுஉரையாற்றி[...]
பாய் சுகாதாரக்[...]
பொறுப்பதிகாரி தி[...]
ந்தவராசாகுறிப்பி[...]
சுழிபுரம் சுகாதாரப்[...]
தகர் திரு. என். சுப்[...]
யம் உட்பட மற்ற[...]
பேசினர்.

---

### இடமாற்ற[...]

உடுப்பிட்டி,[...]
நவாலி தெற்கு அ[...]
மிஷன் தமிழ்ப்பாடசா[...]
தலைமை யாசிரிய[...]
கடமையாற்றிய தி[...]
சின்னத்துரை கர[...]
கிழக்கு அரசினர்[...]
கலவன் பாடசாலைக்[...]
றப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...டுத்திட்டம் ...; ஆனால்..'

டுப்பாடு'' பற்றி
ழ்த்திய திரு. இ.
துரை கூறினார்.
மன்றத் தலைவர்
. கே. சகாதேவன்
பில் கூட்டம் நடை
.
இ. அப்பாத்துரை
கூறியதாவது:—
நாடுகளில் ஜனத்
ப் பிரச்னையில் ஐந்
இடம் வகிப்பது
டு இங்கு எண்ணுயி
அதிகமான பட்ட
வேலையின்றி இருக்
ர். பொருளாதாரத்
ல் மட்டுமல்ல, கல்
றயில் கூட இங்கு
ட்டம் வகுக்கப்பட

தொகை கூடுகிறதே
ஒருகாரணத்துக்காக
கட்டுப் பாட்டை
படுத்தல் மடைமை
ாக்கில் மாடுவளர்ப்
பானில் மீன்பிடி
றையும் அமெரிக்கா
ச்சு, கொல்லவேலை
மாணவர்களுக்குப்
கப்படுகின்றன.
ல் வாய்ப்புக்கள் இவ
அங்கு நிறைய உண்டு
நாட்டில் இவ்வகை
திட்டங்கள் உருவாக
மாணவர்கள் உத்தி
நிலைகளில் அமரவிரு
ர்கள். உத்தியோக
யே குடும்பஸ்தர்க
ன்றனர்.
அரசாங்கம் தொழில்
ளில் படித்த வேலை
ருக்கும் வாலிபர்களு
வலைவாய்ப்பை ஏற்ப
கொடுக்கவேண்டும்
ான முறையான கல்
ட்டம் பொருளாதார
த்தோடு சேர்க்கப்
அமுலாக்கப்பட
டும். அப்போது குடும்
டுப்பாட்டுத் திட்டத்
அவசியமேற்படாது.

## ...மாற்றுவதில் வளர்ச்சி

சுழிபுரம், வெள்ளி.
ள் தங்களைத் தாமே
ஏமாற்றக் கூடியன
இன்றுவளர்ச்சியடைந்
ார்கள். எவ்விடயத்தி
குறுக்குவழியை நாடும்
னமுடையவர்களாக
னர். பாலில் தண்ணீர்
தால் பால் பழுதடை
இல்லை அதைப் பருகு
ள் தான் நஷ்டம் அடை
னர். அரசாங்கம்
ர்வனவு செய்யும்பாலை
மாகவும்' கொழுப்புச்
ள்ளதாகவும் கொடுக்க
டும். அதற்கு எவ்வழி
ின்பற்றவேண்டும் என்
சுகாதார, கால்நடை,
ாயஉத்தியோகஸ்த்தர்
ஆலோசனையைப்
வேண்டும். அதன் படி
மாடுகளை வளர்த்து
ப்பெறவேண்டும், நல்ல
க் கொடுக்க எம்மால்
பும் என்ற உறுதி இருக்க
டும்.
வ்வாறு வலிகாமம்
கு ஐக்கிய பாற்பண்ணைச்
தில் நடைபெற்ற சுகா
க் கருத்தரங்கில் கலந்து
டு உரையாற்றிய மானிப்
சுகாதாரக் கந்தோர்
றுப்பதிகாரி திரு. எஸ்.
ராசா குறிப்பிட்டார்.
ரம் சுகாதாரப் பரிசோ
திரு. என். சுப்பிரமணி
உட்பட மற்றும் பலர்
னர்.

## இடமாற்றம்

உடுப்பிட்டி, வெள்ளி
ாலி தெற்கு அமெரிக்க
ன் தமிழ்ப்பாடசாலையில்
மை யாசிரியராகக்
மையாற்றிய திரு. வ
த்துரை கரவெட்டி
கு அரசினர் தமிழ்க்
ன் பாடசாலைக்கு மாற்
ட்டுள்ளார்.

# செய்தித் திரட்டு

### தமிழ்த்தாயின் சிலைகள்

இலங்கையில் தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ்த்தாய்சிலைகளை நிறுவுவதற்கு இலங்கை தமிழ்த்தாய் மன்றம் முடிவு செய்துள்ளது. மன்றத்தின் செயற்குழு கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. தமிழ்த்தாயின் ஒரே சாயலில் அமைந்த பல வெங்கல உருவச்சிலைகளை செய்து யாழ்ப்பாணம், மட்டுநகர் திருகோணமலை, மலையகம் மன்னூர், வவுனியா ஆகிய பிரதேசங்களுக்கு கோவில்களெடுக்கப்படவிருக்கிறது.

ஃ ஃ

மட்டக்களப்புப் பகுதியில் நீண்டகால இடைவேளைக்குப்பின் மீண்டும் சைக்கிள் திருட்டு ஆரம்பமாகியுள்ளன. அண்மையில் மத்தியாஸ் பெர்னுட் என்பவர் தனது சைக்கிளை பூட்டி வைத்துவிட்டு கூட்டுறவு அலுவலகத்துள் சென்று திரும்பிவந்து பார்த்தபோது சைக்கிள் அங்கு காணப்படவில்லை ஆனல் சைக்கிள் பூட்டு உடைக்கப்பட்டு அதன் ஒருபகுதி நிலத்தில் கிடந்தது.

ஃ ஃ

### குடிநீர் விநியோகம்

கிண்ணியா ,ஆஸ்பத்திரிக்கு குழாய்நீர் விநியோகத்துக்காக புதிய மின்சாரயந்திரம் ஒன்றை உடனடியாக பொருத்தி மின்சாரம் குடிதண்ணீர் என்பன கிடைக்க வழிசெய்க என்று சுகாதார அமைச்சருக்கு அனுப்பியுள்ள அவசரத் தந்தியொன்றில் மூதூர் முதலாவது நாடாளுமன்றப் பிரதிநிதி ஜனுப். எம். ஈ. எச். முகமதலி கேட்டுள்ளார்.

ஃ ஃ

### தனிச் சிங்களம்

நிந்தவூரின் மத்தியில் அமைந்திருக்கும் உரக் கொள்வனவு நிலையம் தமிழ் பேசும் மக்களை அவமதிப்பதாக அமைந்துள்ளதாம். இக்கொள்வனவு நிலையத்தின் பெயர்ப்பலகை 'ரஜயே போறகடாவ' என்று தனிச் சிங்களத்தில் மட்டும் எழுதப்பட்டு தமிழ்பேசும் மக்களைப் பார்த்து சிரிக்கின்றது எனவே உடனடியாக இப் பெயர்ப்பலகையில் 'அரசாங்க உரக்களஞ்சியம்' என்று தமிழிலும் உடனடியாக எழுதி தமிழ்பேசும் மக்களின் குறையை அதிகாரிகள் நீக்க வேண்டுமென பொதுமக்கள் கோருகின்றனர்.

ஃ ஃ

### மற்றோர் வித்தியாலயம்

பாசறையில் அடுத்துள்ள தம்பலகல்வியில் பத்தாயிரம் பேர் படிக்கிறார்கள். அவர்களுக்கு உட்கார்ந்து படிக்கக்கூட வசதி இல்லாமல் இப்பாடசாலை இருக்கிறது. எப்படியும் இன்னோர் மகா வித்தியாலயம் கட்டித்தர முயற்சிக்கிறேன்.

பிபிலை எம். பி. திரு. தர்மதாசா பண்டா தம்பகல்ல மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவின்போது மேற்கண்டவாறு கூறினார்.

ஃ ஃ

### திருமலையில் இராவணன்

திருகோணமலையில் நடைபெறும் இலங்கையின் இருபதாவது சுதந்திரதின விழாவில் இலங்கையினதும் குறிப்பாக திருகோணமலையினதும் சுதந்திர சம்பந்தமான நிகழ்ச்சிகளை வெளிப்படுத்தும் விசேட அணிவகுப்பு ஒன்றும் சேர்த்துக்கொள்ளப்படவிருக்கின்றது. திருகோணமலை மாவட்டத்திலுள்ள 18 பாடசாலைகளின் மாணவ மாணவிகள் இவ் அணிவகுப்பில் கலந்துகொள்வார்கள். இராவணன் திருகோணமலையுடன் சம்பந்தப்பட்ட காட்சி எல்லாள மன்னனின் செங்கோன்மை முதலான 18 வரலாற்று நிகழ்ச்சிகள் இவ்வணிவகுப்பில் இடம் பெறும்.

ஃ ஃ

### கோடீஸ்வரன் வழக்கு

கோடீஸ்வரன் வழக்கு நிதிக்கு இதுவரை 25,000 ரூபா சேர்ந்துள்ளது. பதுளையைச் சேர்ந்த வழக்கறிஞர் திரு. கே. வி. நடராசா இப்பகுதி மக்களிடமிருந்து 1050 ரூபா சேர்த்து அனுப்பியுள்ளார். இவ்வழக்கு நிதிக்கு உதவுமாறு அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஃ ஃ

### மாஜி பொலிஸ் கைது

பலகாலமாக பொலிசாருக்கு டிமிக்கி கொடுத்து வந்த மாஜி பொலிஸ் கன்ஸ்டபிள் ஒருவர் பையாகலை ஏதகம வீட்டில் வைத்து பொலிசாரினுல் கைது செய்யப்பட்டார். இவர் களுத்துறை தெற்கு அவிசாவலை எட்டியாந்தோட்டை பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றியுள்ளார். எட்டியாந்தோட்டை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் போது வேலைநீக்கம் செய்யப்பட்டார் இவருக்கு எதிராக 12 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

ஃ ஃ

### கிராம சேவகர் கைது

பஸ்ஸில் வந்திறங்கிய கிராம சேவையாளர் ஒருவரை மன்னூர் பொலிஸார் திடீர் சோதனை போட்டனர். அவரது கைப்பையில் ஒரு போத்தல் கசிப்பு இருக்கக்கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் மேற்படி கிராம சேவையாளரை கைது செய்ததுடன் கசிப்பையும் கைப்பற்றினர்.

ஃ ஃ

### விற்பனை நிலையம் தீக்கிரை

வவனியா நகரசபைக் கருவாமையில் அமைந்திருக்கும் தற்காலிககாய்கறிவிற்பனவு நிலையத்தின் ஆறு கடைகள் தீக்கிரையாயின. புதிய விற்பனவு நிலயம் அமைக்குமுகமாக தற்காலிகமாக ஓலையினல் வேயப்பட்ட வியாபார நிலையத்தை நகரசபையினர் அமைத்துக் கொடுத்தனர்.

ஃ ஃ ஃ

### பொலிஸ் உடையில் கொள்ளை

அங்குராந்தோட்டைப் பொலிஸ் பிரதேசத்திலுள்ள ஹொரகஸ்மல்ல, வல்பிட்ட என்னும் இடத்தில் பொலிஸ் உடை தரித்து நள்ளிரவில் வீடொன்றில் புகுந்த கொள்ளைக் கூட்டமொன்று துப்பாக்கியைக் காட்டி கொன்றுவிடுவதாக வீட்டிலுள்ளாரைப் பயமுறுத்தியபின்னர் அங்கிருந்த 10,000 ரூபா பெறுமதியான பணம், தங்கம், வெள்ளி ஆபரணங்களைத் திருடிச் சென்றுவிட்டனர்.

# ரூ. 40 லட்சம் செலவில் நீரியல் ஆராய்ச்சி நிலையம்

கொட்டாஞ்சேனை, வெள்ளி நீர்ப்பாசனப் பகுதியின் கீழ் மதிவெல என்னும் இடத்தில் மத்திய நீரியல் ஆராய்ச்சி நிலையம் ஒன்று நிறுவப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது ஜாவத்தைவீதியிலுள்ள நீர்ப்பாசனப் பகுதியின் நீரியல் பிரிவும் மதிவலவுக்கு மாற்றப்பட்டு, மத்திய நீரியல் ஆராய்ச்சி நிலையத்தின் பிரதான அம்சமாக விளங்கும்.

இவ் ஆராய்ச்சி நிலையத்திற்குச் சுமார் 40 லட்சம் ரூபா செலவாகும் என மதிப்பிடப் பட்டுள்ளது. பெரிதோர் ஆய்வுகூடம், வேலைக்கூடம், நீர்ப்பாசன மாதிரித் திட்டங்கள், நீரியல் மாதிரித் திட்டங்கள், நூல்நிலையம், விரிவுரை மண்டபம் முதலியன நிறுவப்படவிருக்கின்றன. 47 ஏக்கர் நிலத்தில் இக் கட்டடங்கள் அனைத்தும் நிறுவப்படும்.

வெள்ளத்தடுப்பு. வெள்ளத்திலிருந்து பாதுகாப்பு, கடலரிப்பு, வடிகால் நிலம் மீட்பு போன்றபல திட்டங்களை வகுத்து, வடிவமைத்து நிர்மாணிக்கத் தேவைப்படும் பொறியியல் ஆராய்ச்சிகளையும் இந்நிலையம் மேற்கொள்ளும்.

கொழும்புத் திட்டத்தின் கீழ் இந்தியாவிலிருந்து வந்துள்ள நிபுணர் திரு. எஸ். சி. தேசாய் இந்தஆராய்ச்சி நிலையம் சம்பந்தமான அறிக்கை ஒன்றை தயாரித்துள்ளார்.

வவனியா செய்திகள்

# 16 ஆயிரம் ஏக்கரில் உணவு உற்பத்தி

வவனியாவில் மாபெரும் உணவு உற்பத்தித் திட்டம் ஒன்று செயலாக்கப்பட்டு வருகிறது இத்திட்டம் விவசாய இலாகா உத்தியோகத்தர் ஒருவரின் தலைமையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. வவனியா மாவட்டத்தைச்சேர்ந்த ''முத்தையன் கட்டு'' திட்டத்தல் 16 ஆயிரம் ஏக்கரில் உணவு உற்பத்தி ஆரம்பமாகி உள்ளது. இதற்கு விவசாய இலாகாவில் உதவி நெறியாளராகக் கடமையாற்றிய திரு. எஸ். கனகரத்தினம் பொறுப்பு ஏற்று முத்தையன் கட்டுக்கு சென்றுள்ளார். 'முத்தையன் கட்டு' நீர்ப்பாசன சிரேஷ்ட உத்தியோகத்தர்களும், விவசாய போதனசிரியர்களும், மற்றும் தொழில்நுட்ப உத்தியோகஸ்தர்களும் இப்பணியை நன்முறையாக நிறைவேற்ற முன்வந்துள்ளனர், 1968-ம் ஆண்டு உணவு உற்பத்தியில் 'முத்தையன் கட்டு முன்னணியில் திகழும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தை சரியான முறையில் அமுல் செய்ய வவனியா அரசாங்க அதிபர் திரு. பி. ஸி. பெரேராவும், காணி அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு, பஞ்சலிங்கமும் ஈடுபட்டுள்ளனர்.

### வேலை அனுபவ நிகழ்ச்சி

வவனியாமாவட்டத்தைச் சேர்ந்த சகல பாடசாலைகளிலும் 30, 31-ம் திகதிகளில் வேலைஅனுபவ நிகழ்ச்சி நடைபெற்றது. இத்தினங்களில் பாடசாலை வளவுகள் துப்புரவு செய்தல், காடு வெட்டுதல், வேலி அடைத்தல், தோட்ட நிலங்களை ஒழுங்குசெய்து பண்படுத்துதல ஆகியன நன்முறையாக நடைபெற்றன இதனை வவுனியா கல்வி அதிகாரி திரு. சந்திரசேகரம்பிள்ளை சென்று கவனித்தார்.

### படிப்பு பாதிப்பு

தற்பொழுது வவனியா மாவட்டத்தில நடைபெற்ற ஆசிரியர் இடமாற்றம் சம்பந்தமாக ஏற்பட்ட குழப்பத்தினுல் இப்பகுதிப் பள்ளிப்பிள்ளைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். பெற்றோர்கள் இதனுல் பெரிதும் கவலையடைந்துள்ளனர். கல்வி அதிகாரிக்கும் வவனியா எம். பி. க்கும் இதுசம்பந்தமாக பெற்றோர் முறையிட்டுள்ளனர்.

# கொழும்புத்துறை மகா வித்தியாலயத்தின் வளர்ச்சி

## அதிபர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், சனி

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தின் தரத்தை உயர்த்தவும் இங்கு பயிலும் மாணவர்களின் தேவையான வசதிகளைப் பூர்த்திசெய்யவும் பெற்றோர் போதிய ஒத்துழைப்புத் தரவேண்டுமென்றும் கல்லூரிக்கு சிறந்த விளையாட்டு மைதானம், பிரார்த்தனை மண்டபம் ஆகியன அமைக்கப்படவேண்டுமெனவும் இவற்றுக்கு எம். பி. க்களும் உதவவேண்டுமெனவும் இம் மகாவித்தியாலயத்தின் புதிய அதிபர் திரு. சச்சிதானந்தம் கேட்டுக்கொண்டார்.

மேற்படி மகாவித்தியாலயத்தின் பெற்றோர் ஆசிரிய சங்கத்தால் அளிக்கப்பட்ட வரவேற்பிற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையிலேயே அவர்மேற்கண்டவாறுகுறிப்பிட்டார்.

சங்க காரியதரிசி திரு. ம. சி. பொன்னம்பலம் பேசுகையில் புதிய அதிபர் நிர்வா[illegible] மிக்கவராக விருப்பதால் கல்லூரியின் தரம் உயரும் எனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் பெற்றோர் இந்த விதத்தில் தமது ஒத்துழைப்பை அளிக்கவேண்டுமெனவும் கூறினர்.

சங்க உபதலைவர் திரு. க. இராஜசிங்கம் பேசுகையில் புதிய அதிபர் கொழும்புத்துறையுடனும் யோகர்சுவாமிகளுடனும் பலகாலமாகத் தொடர்பு கொண்டுள்ளார் எனத் தெரிவித்து கல்லூரியில் விஞ்ஞானக்கல்வி வளர்ச்சிக்கு அவர் உதவவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

# வாழ்க்கை செலவு உயருகிறது

கொழும்பு, வெள்ளி

வாழ்க்கைச்செலவு சென்ற டிசம்பர் மாதத்தில் கொழும்பில் 3 புள்ளி உயர்ந்துள்ளதாக தொழில் இலாகா தகவல் தெரிவித்துள்ளது.

உணவுப் பொருள்களின் விலை உயர்வே வாழ்க்கைச் செலவு இவ்விதம் உயர்ந்ததற்கு முக்கிய காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

## நாட்டிலும் நகரிலும்

''எந்த இந்திய மொழியாவது இந்தியாவின் உத்தியோக மொழியாவதற்குத் தகுதியானதல்ல'' என்று தமிழக முதல்வர் திரு. சி. என். அண்ணுதுரை கூறியபோது, அவர் ஹிந்தியை மட்டுமல்ல, தமிழையும், வங்காளத்தையும், குஜராத்தையும், தெலுங்கையும் அந்தப் பட்டியலில் சேர்த்திருக்கிருர்.

அதேசமயம், ''ஹிந்தி ஒரு நலிவுற்ற, ஆண்மையற்ற, முழுமையற்ற மொழி. ஆனல் தமிழோ ஆறுயிரம் வருடம் பழமையானது'' என்றும் கூறுகிருர்.

ஹிந்தியைவிடத் தமிழே இந்தியாவின் உத்தியோக மொழியாவதற்குத் தகுதியானது என்றும் அவர் கூறவில்லை.

அரசியல் தலைவர்களும், கல்விமான்களும் இந்த விஷயத்தைத் தீர ஆலோசித்து ஒரு முடிவுக்கு வரும்வரை ஆங்கிலமே இந்தியாவின் உத்தியோக மொழியாக இருக்கவேண்டுமென்று அண்ணு விரும்புகிருர்.

''இந்தியாவின் ஒருமைப்பாட்டில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. பிரிவினையில் எனக்கு விருப்பமில்லை, ஆனல் எல்லோரும் சமமாக இருக்கவேண்டும் என்று விரும்புகிறேன்'' இப்படியும் அவர் கூறுகிருர்.

இந்தப் பாழ்பட்டுப்போன மொழிப் பிரச்னையால் மனிதனுடைய சக்தி எவ்விதமெல்லாம் விரயமாகப்போகிறது?

மனிதர் மனிதருடன் கலந்துரையாடி கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கு ஒரு கருவியாயிருப்பதுதான் மொழி. இதைப்போய் ஓர் அரசியல் பிரச்னையாக்குவது தான் ஏன் என்பது, கடவுளே, எனக்கு விளங்கவில்லை!

சாதாரண பொதுமக்களைப் பாருங்கள்! (அரசியலாரைவிட அவர்களே பெரும்பான்மையினர்). அவர்களுக்கு இந்தமொழிப் பிரச்னை அறவே இல்லை. ஏதோ ஒருவிதமாக தமது அன்றாட காரியங்களைச் சாதித்துவிட்டுப் போகிருர்கள்.

அரசியலால் தூண்டிவிடும் இந்தப் பேய், முன்பு இலங்கையில் தாண்டவமாடியது போல இன்று இந்தியாவில் நர்த்தனம்புரிகிறது. தமிழ்ப் படங்கள் வட இந்தியாவில் பகிஷ்கரிக்கப்படுகின்றன. ஹிந்திப் படங்கள் தென்னிந்தியாவில் பகிஷ்கரிக்கப்படுகின்றன.

இலங்கையில் இது இவ்வாறெல்லாம் குளறுபடி செய்த தென்பதை 1958 எல்லோருக்கும் நினைப்பூட்டும்.

இன்று எங்கே போய்விட்டது அந்த மொழிப் பேய்? தமிழர் இன்றும் சிங்கள நாடுகளுக்குப் போய் வியாபாரம், தொழில், உத்தியோகம் செய்வது போல சிங்களவரும் தமிழர்வாழும் இடங்களுக்கு வந்து வியாபாரம், தொழில், உத்தியோகம் முதலியவற்றை எவ்வித சிரமமுமின்றி செய்து வருகின்றனர்.

மொழிப் பிரச்னை எங்கே போய் விட்டது?

'அறியாமை பரமானந்தம்' என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழியுண்டு. அரைகுறையாகப் படித்தவர்கள் தாம் குறுகிய நோக்கத்துடன் மொழி, மதம், சாதி என்ற பலவகைப் பிரச்னைகளை மனிதரிடையே பரப்பி 'ஒரே குலம் ஒன்றே தெய்வம்' என்ற பேருண்மைக்கு அழிவு தேடுகிருர்கள்.

படிப்பில்லாத சாதாரண பாமரமக்கள் இந்த மொழிப் பிரச்னையை எவ்வளவு லாவகமாக அப்படியே தூக்கி

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரியாலைக் கோஷ்டி ஒரு கோலால் வென்றது

யாழ்ப்பாணம், சனி

விளையாட்டமைச்சின் ஆதரவின்கீழ் யாழ்ப்பாணம்காரியாதிகாரி பிரிவுக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கிடையே நடைபெற்றுக்கொண்டிருக்கும் சுற்றுப் போட்டியில் 'ஏ' பிரிவுப் போட்டியில் கொக்குவில் மனோன்மணி கோஷ்டியும், அரியாலை சனசமூக நிலையக் கோஷ்டியும் நேற்று முன்தினம் மோதின.

போட்டியில் அரியாலைக் கழகம் 2 கோல்களையும், மனோன்மணி கழகம் 1 கோலையும் அடித்து 2—1 கோல் எண்ணிக்கையால் அரியாலைக்கழகம் வெற்றியீட்டியது.

திருநெல்வேலி பரமேஸ்வராக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு என். தேவபாலன் மத்தியஸ்தம் வகித்தார்.

[கா. நி]

---

உதைபந்தாட்டம்

# நல்லூர் ருவின்ஸ் கழகம் வெற்றியீட்டியது

யாழ்ப்பாணம், சனி

நல்லூர் அரசடி ருவின்ஸ் விளையாட்டுக்கழகத்துக்கும், குருநகர் 'யுத கவுன்ஸில்' விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் ருவின்ஸ் கழகம் 3—1 கோல்களால் வெற்றியீட்டியது

ஆரம்பத்திலிருந்து போட்டிமுடியும்வரை இரு கோஷ்டிகளும் விறுவிறுப்பாக மோதிக்கொண்டன. போட்டி ஆரம்பமான சில நிமிடங்களின்பின்னர் குருநகர் கோஷ்டியினர் முதலாவது கோலை வேகமாகஅடித்தனர். இதைத்தொடர்ந்து ருவின்ஸ் கிளப் முன்னணி வீரரான யோகரத்தினம் தனது பக்கத்திற்காக ஒரு கோலை அடித்துஇருபக்கத்து கோல்களின் எண்ணிக்கையையும் சமனாக்கினார். இடைவேளையின்போது இரு கோஷ்டியினரும் தலா ஒவ்வொரு கோல்களைப் போட்டிருந்தனர்.

இடைவேளையின் பின்னர் இருகோஷ்டியினரும் மிகப் பலமாக மோதினர். குருநகர் கோஷ்டியினரின் பல அடிகளையும ருவின்ஸ் கிளப் கோல்காப்பு வீரர் திரு. சிவபிரகாசம் காப்பாற்றி தனது கோஷ்டிக்கு வெற்றியை ஈட்டிக்கொடுத்தார். இச்சந்தர்ப்பத்தில் ருவின்ஸ் கிளப் பின்னணி வீரர்களின் அதிர் அடியும். முன்னணி வீரர்களின் சிறப்பான 'பாசிங்'கும் அருமையாகவிருந்தன. இக்கோஷ்டியைச் சேர்ந்த யோகரத்தினமும். ஜெயராசவும்மேலும் ஒவ்வொரு கோலைப் போட்டு தமது எண்ணிக்கையை 3 ஆக்கி குருநகர் கோஷ்டியை 3—1 கோல்களால் வெற்றியீட்டினர்.

திருநெல்வேலி பரமேஸ்வராக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. பிருங்புஷ்பா மத்தியஸ்தம் வகித்தார்.

(கா நி)

---

# திருட்டு வழக்கில் எதிரிக்கு சிறை

வல்வெட்டித்துறை, வெள்.

வியாபாரி மூலையைச் சேர்ந்தவரும் யாழ்ப்பாணம் கல்விக் கந்தோரில் லிகிதராகக் கடமையாற்றி வருபவருமான திரு. கே. எஸ் சிற்றம்பலம் என்பவருடைய வீட்டை கடந்த வருடம் யூலைமாதம் முதலாம் திகதி உடைத்து சுமார் ஆயிரம் ரூபா பெறுமதியான சாமான்கள். சந்தனக்கிண்ணம், பன்னீர்ச் செப்பு, மணிக்கூடு முதலிய பொருட்களை களவாடியதாக பருத்தித்துறையைச் சேர்ந்த எம். பெர்னாண்டோ, சி. சபாரத்தினம் ஆகிய இருவர் மீதும் குற்றம் சாட்டித் தொடரப் பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் எதிரிகள் இருவரையும் குற்றவாளிகளாகக் கண்டு முதலாம் எதிரியான பெர்னாண்டோவுக்கு ஒன்பது மாதச்சிறைத் தண்டனையும் இரண்டாம் எதிரியான சபாரத்தினத்துக்குஆறுமாதச்சிறைத்தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்தார்.

---

# கொழும்பில்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

டர் கே. புரோஸ், பெல்பாஸ்ட் நகரிலுள்ள குவீன் சர்வகலாசாலையைச்சேர்ந்த டாக்டர் எவ் என். பைணி. மூலார்ட் விண்வெளி விஞ்ஞான ஆய்வுகூடத்தைச் சேர்ந்த டாக்டர் ஏ. பி வில்மோர், பிரிட்டிஷ் வானிலைக் காரியாலயத்தைச் சேர்ந்த டாக்டர் ஆர். பிரித் ஆகியோரே பிரிட்டிஷ் தூது கோஷ்டி அங்கத்தவர்களாகும்

இலங்கை அரசாங்கம் இந்த மகாநாட்டை ஒழுங்கு செய்துள்ளது. இலங்கை விஞ்ஞானக் கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவனத்தின பௌதிக போதனாபீடத் தலைவர் டாக்டர் எஸ் ஞானலிங்கம் மற்றைய ஸ்தல ஒழுங்குகளைச் செய்துவருகிறார்.

வானவெளி ஆராய்ச்சியில் ஒரு விரிவான சாம்ராஜ்யக் கூட்டுறவுத் திட்டத்தை உருவாக்குவது பற்றி இந்த மகாநாட்டின் போது பரிசிலனை செய்யப்படும்.

---

# இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

## சனி 3-2-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு. 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் & 49 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 நேயர்விருப்பம்.

இரவு 6-15 தாளவாத்தியக்கச்சேரி, 6-45 பாவளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 முத்திநெறி — செல்வி எஸ். நாதன், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 செய்தி, 9-40 பாட்டு — எம். கோவிந்தராசா.




எப்பயிர்க்கும் உய்வுண்டாம் உய்விலை அப்பயிர்க்கு 'ஷெல்' பூச்சி நாசினி பயனை பாவிக்காரெனில்.

AGENTS

ரோயல் டிஸ்பென்ஸறி

PHONE 397 JAFFNA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யானை அடையாள குளிர் பானதிகள்

# கொண்டாட்டம்

## புது ரக வண்ணப் போத்தல் மூடிகள்




### இப்பத்திரிகை போட்டிக்காக தரும் நம்பகமான யோசனை

எலிபன்ட் மார்க் குளிர்பான போத்தல் மூடிகளை சேகரித்துக் கொண்டே இருங்கள்.

போத்தல் மூடியில் உள்ள தக்கையை மிகக் கவனமாக அகற்றி உள்தகட்டில் ஒரு ஆங்கில எழுத்து இருக்கின்றதா எனப் பாருங்கள். அப்படி ஒரு எழுத்து இருந்தால் எறிந்து விடாதீர்கள். எத்தனை எழுத்துக்கள் சேர்க்க முடியுமா அத்தனை எழுத்துக்களையும் சேகரியுங்கள்.

### நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியவை

ஏன் எலிபன்ட் மார்க் குளிர்பானங்கள் இலங்கையில் மிகவும் சுத்தமானவை எனப் போற்றப்படுகின்றன.

இராப் போஜனம், களியாட்டங்கள், குழந்தைகளின் பிறந்ததினம், கல்யாணம் முதலிய வைபவங்களுக்கு உணவு. சிற்றுண்டி பரிமாற ஏன் எலிபன்ட் ஹவுஸ் ஸ்தாபனத்தையே எல்லோரும் நாடுகிறுர்கள் எனத் தெரியுமா?

### போட்டியில் கலந்து கொள்வோர் தயவுசெய்து இதை கவனமாகப் படிக்கவும்.

உங்களுக்கு வழமையாக யானை மார்க் குளிர் பானங்களை அளிக்கும் கடையோ, கிளப்போ, சினிமாவோ, ஹோட்டலோ அல்லது வேறு இடமேதுமிருந்தால் அங்கு உங்களுக்குப் பிடித்தமான சிப்பந்தியின் பெயரையும் விலாசத்தையும் குறித்துக் கொள்ளுங்கள். இப் போட்டியில் நீங்கள் பரிசுபெற்ருல், அவரும் பெருந்தொகையான பரிசைப் பெறத் தகுதியுடையவராவார்.

ரொக்கமாக 350 பரிசுகள் வென்றுக வேண்டும் — அதுவரை இப்போட்டியின் முடிவுதிகதி குறிப்பிடப்படமாட்டா —
இது ஆறுமாதம்வரை எடுக்கலாம்.

## எலிபன்ட் ஹவுஸ்

சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமலை சுதந்திர தினவிழாவில்

# தமிழரசு வாலிப முன்னணி கலந்து கொள்ளாது

யாழ்ப்பாணம். வெள்ளி திருக்கோணமலையில் நாளை மறுதினம் நடைபெறவிருக்கும் சுதந்திரதினவிழாவில் தமிழரசுக்கட்சிவாலிப முன்னணியினர் கலந்து கொள்ளமாட்டார்கள்.

நேற்றுமாலை நடைபெற்ற தமிழரசுக்கட்சி வாலிபமுன்னணியின் பொதுச்சபைக் கூட்டத்தில் இதுசம்பந்தமான தீர்மானம் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. திரு. க. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு 56 பொதுச்சபை உறுப்பினர்கள் கலந்துகொண்டார்கள். திருமலையிலிருந்தும் 6 பேர் விசேஷமாக விந்திருந்தார்கள்.

## இடமாற்றம்

வல்வெட்டித்துறை, சனி

வல்வெட்டித்துறை பட்டினசபையில் காரியதரிசியாகக் கடமையாற்றி வந்த திரு. எம். தாமோதரம்பிள்ளை இன்று முதல் திருக்கோணமலை நகர சபைக்கு இடமாற்றம் செய்யப் பட்டுள்ளார்.

# தேசியசுவீப்முடிவுகள்

நேற்று நடைபெற்ற தேசிய லொத்தர் சபையின் 179-வது சுவீப் முடிவுகள் விபரம் பின்வருமாறு:-

**1-வது பரிசு**

47 Y 0626 ரூ. 100,000

**2-வது பரிசு**

48 N 0544 ரூ. 40,000

**3-வது பரிசு**

19 V 0860 ரூ. 10,000

தலா ரூ. 885/40 பெறும் 100 டிக்கட்டுகளின் விபரம் வருமாறு!

| | |
|---|---|
| 21 S 0182 | 19 F 0340 |
| 15 A 0693 | 33 X 0212 |
| 29 U 0042 | 38 R 0208 |
| 44 O 0951 | 35 R 0018 |
| 43 E 0551 | 02 J 0733 |
| 17 F 0771 | 45 Q 0052 |
| 19 B 0344 | 28 O 0406 |
| 40 O 0969 | 23 L 0128 |
| 27 S 0461 | 48 D 0501 |
| 15 F 0873 | 23 D 0137 |
| 44 Z 0413 | 47 R 0152 |
| 39 B 0403 | 16 N 0786 |
| 33 Q 0733 | 41 K 0315 |
| 04 U 0310 | 07 R 0137 |
| 14 X 0801 | 02 Z 0119 |
| 16 O 0776 | 25 F 0874 |
| 03 O 0411 | 28 Y 0839 |
| 37 B 0224 | 14 E 0259 |
| 27 B 0127 | 34 E 0272 |
| 39 X 0795 | 28 H 0088 |
| 43 D 0925 | 44 O 0462 |
| 20 E 0300 | 45 E 0074 |
| 16 C 0716 | 23 F 0733 |
| 32 P 0054 | 01 B 0815 |
| 13 C 0089 | 12 Y 0578 |
| 03 Z 0825 | 07 Q 0157 |
| 36 O 0584 | 02 S 0684 |
| 22 H 0123 | 45 Y 0134 |
| 27 L 0949 | 25 P 0434 |
| 14 J 0360 | 39 L 0532 |
| 43 M 0349 | 07 H 0037 |
| 27 O 0057 | 07 K 4008 |
| 39 R 0760 | 19 V 0077 |
| 34 V 0880 | 38 G 0259 |
| 44 N 0497 | 26 H 0644 |
| 07 B 0962 | 11 G 0266 |
| 46 C 0345 | 33 N 0931 |
| 30 W 05 0 | 06 G 0022 |
| 41 D 0638 | 41 V 0220 |
| 03 O 0124 | 48 H 0454 |
| 40 U 0433 | 38 D 0772 |
| 42 B 0148 | 03 A 0357 |
| 12 C 0826 | 09 F 0984 |
| 28 M 0928 | 21 F 0758 |
| 30 T 0611 | 03 N 0482 |
| 03 Z 0742 | 48 Z 0590 |
| 33 W 0333 | 10 F 0953 |
| 15 R 0774 | 29 C 0876 |
| 43 T 0913 | 35 D 0053 |
| 10 T 0486 | 05 O 0457 |

[இவை யாவும் உறுதிப் படுத்தப்படவேண்டியவை]

## திநேஷ்சிங் தலைவர்

புதுடில்லி, பெப். 1

இன்று இங்கு ஆரம்பமான ஐ. நா வின் இரண்டாவது சர்வதேச வர்த்தக அபிவிருத்தி மகாநாட்டின் தலைவராக இந்திய வர்த்தகஅமைச்சர் திரு. திநேஷ்சிங் தெரிவு செய்யப்பட்டார்.

## புதுச்சேரியிலும் மாணவர் கிளர்ச்சி

புதுடில்லி, பெப். 1

புதுச்சேரியிலுள்ள கல்வி நிறுவனங்கள் யாவும் இன்று மூடப்பட்டன. அவை மீண்டும் திறக்கப்படுவதற்கான திகதி அறிவிக்கப்படவில்லை.

மாணவர்கள் மத்தியில் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி தீவிரமடைந்ததன் காரணமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## பொது நிலையங்களுக்கு நன்கொடை

அளவெட்டி, வியாழன்

காங்கேசன்துறைப் பட்டினசபையின் விசேஷகூட்டமொன்று பட்டினசபை சபாமண்டபத்தில் திரு. ஆ. வ. சதாசிவம் தலைமையில் நடைபெற்றபோது இம்முறை பட்டினசபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கும், நூல்நிலையங்களுக்கும் மற்றும் மருத்துவநிலையங்களுக்கும் நன்கொடை வழங்குவதற்கு 1000 ரூபாயைப் பகிர்ந்து கொடுப்பதென தீர்மானம் நிறைவேறியது.

## தந்திவசதி யில்லை

உடுப்பிட்டி, வியபழன்.

உடுப்பிட்டித் தொகுதியைச்சேர்ந்த தம்ப செட்டி 'ஏ. இரேட்' உப தபால் கந்தோருக்கு டெலிபோன் தொடர்பு இல்லாமையினால் பொதுமக்கள் இக் கந்தோர் மூலம் தந்தி வசதிகள் பெறமுடியாது கஷ்டமுற்று வருவதாக அறியப்படுகிறது. இது சம்பந்தமாக பட்ட அதிகாரிகளை நடவடிக்கையெடுக்குமாறு பொதுமக்கள் கோரியுள்ளதாகவும் அறிய வருகிறது.

## லண்டன் செல்கிறார்

யாழ்ப்பாணம், வெள்ளி

மானிப்பாயைச் சேர்ந்த செல்வி இராஜபுஷ்பவல்லி பிரிட்டிஷ் பிரஜா உரிமை பெற்று இம் மாதம் 10-ந் திகதி பி.ஓ.ஏ.சி. விமான மூலம் லண்டனுக்குப்பயணமாகிறார்.

இவர் மானிப்பாய் முன்னாள் கிராமாதிகாரி இராஜகுலசிங்கத்தின் மூன்றுவது புதல்வியும் மானிப்பாய் இந்துமகளிர் கல்லூரியின் பழையமாணவியுமாவார்.

## கிளிநொச்சி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நொச்சி எம். பி. கல்வி அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு. எல்.ஜே. பெரேராவுக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார். அவர் அக் கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது:

எவ்வித பொருத்தமான காரணமுமில்லாமல், தமது தொகுதியிலுள்ளபாடசாலைகளின் தலைமைஆசிரியர்கள் பலர் வெளிஇடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர். இவர்களுடைய இடங்களும் முன்னிருந்த தலைமைஆசிரியர்களின் வெற்றிடங்களும் இன்னமும் நிரப்பப்படவில்லை. இந்தமாதிரி ஒரு பொறுப்பற்ற முறையில் நடப்பது, மக்களை இந்த அரசாங்கத்துக்கும் எங்களுக்குமிடையில் வெறுப்புணர்ச்சியை ஏற்படுத்துவதாகவுள்ளது.

இந்த வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்படவேண்டும். எனது தொகுதியிலிருந்து மாற்றப்பட்ட தலைமைஆசிரியர்கள் மீண்டும் அதே பாடசாலைகளுக்கு அனுப்பப்பட வேண்டும். எனது தொகுதியில் கஷ்டமான இடங்களிலுள்ள பாடசாலைகளில் கற்பித்த தலைமை ஆசிரியர் மீண்டும் கஷ்டமான இடங்களுக்கே மாற்றப்பட்டுள்ளார்கள்.

கல்விஅமைச்சின் நிரந்தரக்காரியதரிசிக்கு அனுப்பப்பட்ட இக் கடிதத்தின் பிரதி கல்விஅமைச்சருக்கு அனுப்பிவைத்திருப்பதுடன் இந்தக் குறைகள் நீக்கப்படாவிடில் பார்லிமென்டில் இது சம்பந்தமாக கேட்கவேண்டியநிலை ஏற்படுமென்றும் குறிப்பொன்றில் தெரிவித்துள்ளார். [நி]

## திருமலை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

புக்கொடி தொங்க விடாது தனியார்இடங்களில் கறுப்புகொடிகளைப்பறக்கவிடுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

சுதந்திரதினக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ள விரும்பும் சிங்கள மக்களுக்கு தமிழ்மக்கள் ஒருவித இடையூறும் செய்யாதிருக்கும்படியும்திரு. சுந்தரலிங்கம்வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## நாட்டிலும் நகரிலும்

[5-ம் பக்க தொடர்ச்சி]

எறிந்துவிட்டுத் தத்தம் வாழ்க்கையை இன்பகரமாக நடத்துகிறார்கள்?

இலங்கையிலும் சரி, இந்தியாவிலும் சரி, இப்பொழுது மிகவும் அவசியமாகத் தேவைப்படுகிறது பொருளாதார உறுதி. பச்சையாக சொல்லப்போனால் மனிதன் உடலையும், உயிரையும் ஒட்டவைப்பதற்கு வழி தேடவேண்டும்.

பட்டினியால் வருந்துபவனுக்கு மொழி ஏது, மதம் ஏது?

அரசியல் தலைவர்கள் இந்த மொழிப்பிரச்னையை மறந்து மக்களின் பசியைத் தீர்ப்பதற்கு ஏதாவது வழிவகை செய்யவேண்டுமேயன்றி அநாவசியமான, பொருத்தமற்ற, தேவையற்ற பிரச்னைகளைக் கிளப்பிக்கொண்டிருப்பது அழகாகாது.

முதலில் பசியைத் தீருங்கள், பின்பு மொழியைப் பற்றி ஆலோசிக்கலாம்.

—வழிப்போக்கன்

## இலவச பாடப் புத்தகங்கள்

அளவெட்டி, வியாழன்

காங்கேசன்துறை பட்டினசபையின் எல்லைக்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் ஏழைப் பிள்ளைகளுக்கு 1000 ரூபாய் பெறுமதியான பாடப்புத்தகங்களை பட்டினசபை இலவசமாக வழங்கியுள்ளது.

## பீஹாரில் புதிய மந்திரிசபை

பட்னா, பெப். 1

பீஹாரில் திரு. வி. பி. மண்டல் தலைமையில் மந்திரிசபை இன்றுகாலை பதவி ஏற்றுள்ளது.


## யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி முக்கிய அறிவித்தல்

காலம் சென்ற, யாழ்ப்பாணம் ஐக்கிய லாபநிதியின் நிர்வாக அதிபர் சிவதர்ம பாஸ்கரன் சுப்பிரமணியம் கனகசபை ஜே. பி. அவர்களின் ஈமக்கிரியையில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு இறுதி மரியாதையைச் செலுத்தினர். ஐக்கிய லாபநிதி மனேஜரும், ஊழியர்களும் அன்னாரின் இறுதி யாத்திரையில் கலந்து கொண்டு தமது அஞ்சலியைச் செலுத்தினார்கள்.

நிர்வாக அதிபரின் மறைவினால் அவர் நிர்வகித்து வந்த ஐக்கிய லாப நிதியின் எதிர்கால நிலை குறித்து சிலர் கவலையடைந்துள்ளதாகத் தெரிகிறது. இப்படியான எண்ணங்கள் ஏற்படுவது இயற்கையே. ஆனாலும் எமது நிர்வாக அதிபர், மறைந்த வள்ளல் கனகசபை அவர்கள், தமது மறைவுக்குப் பிறகும் நிதி எவ்வித குழப்பமுமில்லாமல் சரிவர இயங்குவதற்கான ஏற்பாடுகளை செய்து வைத்துள்ளார். எனவே தொடர்ந்தும் முன்னர் போல் இப்போது பொறுப்பேற்றிருக்கும் நிர்வாகிகள் பொறுப்பை உணர்ந்து செயலாற்றுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இ. கந்தசாமி
மனேஜர்,
யாழ்ப்பாண ஐக்கிய லாபநிதி.
கம்பனி லிமிற்றெற்.

432



**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயாதினங்களில்4காட்சி
6வது வாரம்!
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா நடித்த
**காவல்காரன்**

**நியூ காலிங்கன்**
(இணுவில்)
தினசரி 6-30, 10-00 மணி
காந்தாராவ்-
கிருஷ்ணகுமாரி
நடித்த
**வீரத்திலகம்**

**MANOHARA**
JAFFNA
Daily at 4-45, 7-00, 9-45 P.M
Poya days 10-30 A. M.
JamesStewart–MaureerOhara
in
**THE RARE BREED**

**REGAL** JAFFNA
Daily at
4-45, 7-00, & 9-45 p.m.
Shirley MacLaine
Michael Caine
in
**GAMBIT**
(in Technicolor)

**இன்று முதல் குதூகல ஆரம்பம்**

| | | |
|---|---|---|
| கெப்பிட்டல் [கொழும்பு] | பிளாஸா [வெள்ளவத்தை] | மைலன் [ஜிந்துப்பிட்டி] |
| வெலிங்டன் [யாழ்ப்பாணம்] | விஜயா [மட்டக்களப்பு] | ஸ்ரீகிருஷ்ணா [திருமலை] |
| மொடர்ன் [பதுளை] | ராஜ் [நீர்கொழும்பு] | |

ரவிச்சந்திரன்
கல்பனா
நாகேஷ்
மனோரமா
நடித்த
# மதராஸ் To பாண்டிச்சேரி


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் வினரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 53-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 3-ந்திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org